
# தினபூமி

thinaboomi.com

பூமி: 30 சுற்று: 195 ஆனி 08 | Regd. No.CBE/090/2011-2013

கோவை, ஞாயிறு, ஜூன் 22, 2025 | ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00

## இந்தியா-பாக். போரை நிறுத்திய எனக்கு அமைதிக்கான நோபல் கிடைக்காது: ட்ரம்ப் ஆதங்கம்

...2-ம் பக்கம்

## அகமதாபாத் விமான விபத்து: 3 முக்கிய அதிகாரிகளை நீக்க ஏர் இந்தியாவுக்கு அறிவுறுத்தல்

...3-ம் பக்கம்

## இங்கி.க்கு எதிரான முதல் டெஸ்ட்: இந்திய அணி முதல் இன்னிங்சில் 471 ரன்கள் குவிப்பு: 3 பேர் சதம்

...6-ம் பக்கம்





சென்னை வள்ளுவர் கோட்டத்தில் உள்ளாட்சி பொறுப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பங்கேற்புரிமை வழங்கி சமூக நீதியை நிலைநாட்டியதற்காக மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் நடைபெற்ற நன்றி பாராட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் சிங்கம் சிலையை நினைவுப்பரிசாக வழங்கினர்.

### இஸ்ரேல் - ஈரான் போரால் சிக்கியுள்ள

# தமிழர்களுக்கு உதவிகளை வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு

## டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் கட்டுப்பாட்டு அறை திறப்பு-அவசர உதவி எண்கள் அறிவிப்பு

சென்னை, ஜூன் 22-

**இஸ்ரேல் - ஈரான் இடையே தற்போது ஏற்பட்டுள்ள போர் காரணமாக அந்நாடுகளில் வசிக்கும் தமிழர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு உடனடியாக அவர்களுக்கு தேவைப்படும் அனைத்து உதவிகளையும் வழங்கிட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார். இதற்காக புது டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் 24x7 இயங்கும் கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

### பாதுகாப்பாக இருக்க...

இது குறித்து வெளியிட்டுள்ள அரசு செய்திக் குறிப்பில், “தமிழக முதல்வர் ஸ்டாலின் இஸ்ரேல் - ஈரான் இடையே தற்பொழுது ஏற்பட்டுள்ள போர் காரணமாக அந்நாடுகளில் வசிக்கும் தமிழர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறையை அங்குள்ள தமிழர்களின் விவரங்களைப் பெற்று உடனடியாக அவர்களுக்கு தேவைப்படும் அனைத்து உதவிகளையும் வழங்கிட முதல்வர் ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார்.

### அழைத்து வரும் பணி..

இந்தச் சூழலில் ஈரான் நாட்டிலிருந்து இந்திய வெளியுறவுத்துறை மூலமாக இந்தியர்கள் தாயகம் திரும்பத் தொடங்கியுள்ளனர். இவர்களில் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களை கண்டுபிடித்து தமிழ்நாட்டுக்கு பாதுகாப்பாக அழைத்து வரும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. மேலும், அங்குள்ள நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, தமிழர்களுக்கு தேவைப்படும் உதவிகளை செய்ய தமிழ்நாடு அரசு தயார் நிலையில் உள்ளது.

### அவசர உதவி எண்கள்

இதற்கென புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் 24x7 இயங்கும் கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவசர உதவி எண்கள் பின்வருமாறு: தொலைபேசி: *011 24193300 (Land line)*, கைப்பேசி எண்: *9289516712 (Mobile Number with Whatsapp)*, மின்னஞ்சல்: *tnhouse@tn.gov.in, procofficetnh@gmail.com*. அதுமட்டுமின்றி தமிழ்நாடு அரசின் சென்னையில் உள்ள அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகத்தில், செயல்பட்டுவரும் 24x7 கட்டணமில்லா உதவி எண்களை தொடர்புகொள்ளவும், தங்கள் பகுதியில் உள்ள இந்திய தூதரகம் வெளியிடும் அறிவுறுத்தல்களை பின்பற்றி பாதுகாப்பாக இருக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்தியாவிற்குள் - *1800 309 3793*, வெளிநாடு: *+91 8069009901 / 08069009901, +91 8069009900 / 08069009900 (Missed Call)* மின்னஞ்சல் - *nrtchennai@tn.gov.in / nrtchennai@gmail.com*.” இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இளைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்:

# தி.மு.க. நிர்வாகிகளுக்கு முதல்வர் அறிவுறுத்தல்

சென்னை, ஜூன் 22-

**சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று கிருஷ்ணகிரி, அணைக்கட்டு, சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து கருத்துக்களைக் கேட்டறிந்தார். அப்போது, முதல்வர் மு.க.ஸ்டாலின், தி.மு.க. நிர்வாகிகளுக்கு இளைஞர்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.**

சட்டமன்றத் தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள நிலையில், ஆளும் தி.மு.க., தேர்தலுக்கான பணிகளை முடுக்கிவிட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, மதுரையில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் அறிவித்தபடி, ‘உடன்பிறப்பே வா’ என்ற பெயரில், தொகுதிவாரியாக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வை முதல்வர் மு.க.ஸ்டாலின் மேற்கொண்டு வருகிறார். அதன்படி, நேற்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் கிருஷ்ணகிரி, அணைக்கட்டு, சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

அப்போது, தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் மாவட்டச் செயலாளர்களின் செயல்பாடுகள் குறித்து முதல்வர் கேட்டறிந்ததாகக் கூறப்படுகிறது. கட்சியில் உழைப்பவர்களுக்கு அதற்கு ஏற்ற அதிகாரம் நிச்சயம் கிடைக்கும் என உறுதி அளித்த முதல்வர், கட்சிப் பொறுப்புகளில் இளைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க அறிவுறுத்தியதாகக் கூறப்படுகிறது. தமிழக அரசின் மக்கள் நல திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும், 200 தொகுதிகளில் வெற்றி பெறும் வகையில் உழைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட அறிவுறுத்தல்களையும் முதல்வர் வழங்கியதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

### விசாகப்பட்டினத்தில் 3 லட்சம் பேர் பங்கேற்ற யோகா நிகழ்ச்சி:

# அமைதிக்கான வழியை காட்டுகிறது யோகாசனம்

## பிரதமர் நரந்திர மோடி பேச்சு



விசாகப்பட்டினம், ஜூன் 22-

**சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு நேற்று (ஜூன் 21) ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் கடற்கரையில் மாபெரும் அரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் நேற்று காலை பிரதமர் நரேந்திர மோடி, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, துணை முதல்வர் பவன் கல்யாண், அமைச்சர்கள், எம்.பி., எம்எல்ஏ.க்கள் மற்றும் சினிமா, வர்த்தக பிரமுகர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், பொதுமக்கள் என சுமார் 3 லட்சத்துக்கும் அதிகமானோர் பங்கேற்று யோகாசனங்கள் செய்தனர்.**

இதில் உரையாற்றிய பிரதமர் மோடி, “உள் அமைதி உலகளாவிய கொள்கையாக மாறும் நாளாக சர்வதேச யோகா தினம் இருக்கட்டும். யோகா என்பது வெறும் தனிப்பட்ட பயிற்சியாக மட்டுமல்லாமல், உலகளாவிய கூட்டாண்மை மற்றும் ஒற்றுமைக்கான சக்திவாய்ந்த கருவியாகவும் ஏற்கப்பட வேண்டும். யோகாவை கூட்டு நல்வாழ்வுக்கான பங்களிப்பாக ஒவ்வொரு தேசமும் ஏற்க வேண்டும். அமைதிக்கான வழியை காட்டுகிறது யோகா.

உடல் பருமன் என்பது இன்று சர்வதேச அளவில் பெரிய சவாலாக உள்ளது. யோகா மூலம் 10 சதவீத உடல் பருமனைக் குறைக்கலாம் என ‘மனதின் குரல்’ நிகழ்ச்சியில் நான் சொல்லி இருந்தேன். இந்த சவாலை மக்கள் ஏற்க வேண்டுமென இந்நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். கடந்த 2014-ல் ‘ஜூன் 21’-ம் தேதியை சர்வதேச யோகா தினமாக ஐ.நா அறிவித்தது. அதன் பின்னர் இந்த 11 ஆண்டுகளில் 174 நாடுகளில் யோகா ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்படி உலகத்தை யோகா இணைத்துள்ளது” என பிரதமர் மோடி பேசினார்.

காலை சுமார் 6 மணி அளவில் இந்த யோகா பயிற்சிகள் தொடங்கின. ஆந்திர மாநிலம் முழுவதும் அந்தந்த மாவட்ட தலைநகரங்கள் மற்றும் முக்கிய நகரங்களிலும் யோகா பயிற்சி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவற்றின் மூலம் ஒரே நேரத்தில் சுமார் 5.5 லட்சம் பேர் வரை யோகா செய்து உலக சாதனை படைக்கப்பட்டது. பிரதமர் உட்பட விவிஐபிக்கள் வருகையால் விசாகப்பட்டினத்தில் பலத்த

(கடைசி பக்கம் பார்க்க)

# அமித்ஷாவின் பயம் ஆங்கிலத்தை பற்றியது அல்ல: அமைச்சர் பதிலடி

சென்னை, ஜூன் 22-

**அமித்ஷாவின் பயம் ஆங்கிலத்தைப் பற்றியது அல்ல என்று அமைச்சர் அன்பில் மகேஷ் கூறியுள்ளார்.**

இந்தியாவில், ஆங்கிலம் பேசுபவர்கள் விரைவில் வெட்கப்படுவார்கள் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசிய அமித்ஷா, இந்தியாவில், ஆங்கிலம் பேசுபவர்கள் விரைவில் வெட்கப்படுவார்கள். அத்தகைய சமூகம் உருவாகும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

நம்முடைய நாட்டின் மொழிகள், நம்முடைய கலாசாரத்தின் ரத்தினங்கள் என்று நான் நம்புகிறேன். நம்முடைய மொழிகளில் இல்லையென்றால், நாம் உண்மையான இந்தியனாக இல்லாமல் போய்விடுவோம். நமது நாட்டையும், நமது கலாச்சாரத்தையும், நமது வரலாற்றையும், நமது மதத்தையும் புரிந்து கொள்ள, எந்த அந்நிய மொழியும் போதுமானதாக இருக்காது எனத் தெரிவித்தார்

அமித்ஷாவின் இந்த பேச்சை கண்டித்த எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, " ஆங்கிலம் அதிகாரமளிப்பது. வெட்கக்கேடானது அல்ல என தெரிவித்தார். இந்நிலையில், அமித்ஷாவின் கருத்தை விமர்சித்து பள்ளிக் கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

அவரது பதிவில், ஆங்கிலம் இனி ஒரு காலனித்துவ நினைவுச்சின்னம் அல்ல - அது உலகளாவிய முன்னேற்றத்திற்கான ஒரு கருவி. சீனா, ஜப்பான், கொரியா, இஸ்ரேல் மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகள் அதை ஒரு காலனித்துவ நினைவுச்சின்னமாக அல்ல, மாறாக அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் வர்த்தகத்தில் முன்னிலை வகிக்கக் கற்பிக்கின்றன. வலுவான தேசிய பெருமையைக் கொண்ட சீனா கூட, வளர்ச்சிக்கு ஆங்கிலத்தை அவசியமாகக் கருதுகிறது.

ஆனால் இந்தியாவில், அமித்ஷாவும் ஆர்.எஸ்.எஸ்.-ம் ஆங்கிலத்தை மேல்தட்டு மக்களுக்கு உரியதாக சித்தரிக்க முயல்கிறார்கள். இதற்கு காரணம் ஆங்கிலம் நமது கலாச்சாரத்திற்கு தீங்கு விளைவிப்பதால் அல்ல, மாறாக ஏழைகள், தலித்துகள் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களை உயர்த்துவதற்கு அதிகாரம் அளிப்பதால் இவ்வாறு கூறுகின்றனர். ஒரு காலத்தில் சமஸ்கிருதம் இருந்ததைப் போலவே, இப்போதும் ஆங்கிலம் பெரும்பாலான மக்களுக்கு எட்டாதவாறு இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

அனைவருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்பதில் திமுக நம்பிக்கை கொண்டுள்ளது. நமது அடையாளத்திற்காக தமிழ், வாய்ப்பிற்காக ஆங்கிலம். அதனால் தான் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் இந்த இரண்டும் கிடைக்கின்றன. ஏனென்றால் மொழி ஒரு தடையாக அல்ல, ஒரு ஏணியாக இருக்க வேண்டும். அமித்ஷாவின் பயம் ஆங்கிலத்தைப் பற்றியது அல்ல - அது சமத்துவம் மற்றும் வளர்ச்சி பற்றியது என தெரிவித்தார்.

# 'ஆபரேஷன் சிந்து' மூலம் ஈரானிலிருந்து 517 இந்தியர்கள் தாயகம் திரும்பினர்

இஸ்ரேல், ஜூன் 22-

**ஆபரேஷன் சிந்து நடவடிக்கையின் மூலம், ஈரானிலிருந்து சுமார் 517 இந்தியர்கள் தாயகம் திரும்பியுள்ளதாக, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.**

இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய இருநாடுகளும் இடையில் போர் துவங்கியுள்ள நிலையில், அந்நாடுகளிலுள்ள இந்தியர்களை மீட்டு தாயகம் அழைத்து வருவதற்காக, மத்திய அரசு ஆபரேஷன் சிந்து எனும் மீட்புத் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலையில், ஈரான் சென்று கல்வி பயின்ற மாணவர்கள், அந்நாட்டில் வசித்தவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் என ஏராளமான இந்தியர்கள் நேற்று முன்தினம் இரவு மற்றும் நேற்று காலை, வரை இயக்கப்பட்ட விமானங்கள் மூலம் தில்லி வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால், தனது எக்ஸ் தளத்தில் கூறியுள்ளதாவது:- சிறப்பு விமானங்கள் மூலம் ஈரானிலிருந்த இந்தியர்கள் மீட்கப்பட்டு ஜூன் 20 ஆம் தேதி, இரவு 11.30 மணியளவில், புது தில்லி வந்தடைந்துள்ளனர்” எனக் கூறியுள்ளார். இதேபோன்று மற்றொரு பதிவில், துர்க்மெனிஸ்தான் நாட்டிலிருந்து இயக்கப்பட்ட மற்றொரு சிறப்பு விமானம் மூலமாக ஈரானிலிருந்து இந்தியர்கள் பத்திரமாக அழைத்து வரப்பட்டதாகவும்; இதன்மூலம், தற்போது வரை 517 இந்தியர்கள் தாயகம் திரும்பியுள்ளதாகவும், அவர் அறிவித்துள்ளார்.

இத்துடன், இந்தியர்களை அழைத்து வருவதற்கு உதவிய ஈரான் அரசுக்கு. இந்திய அரசு நன்றிகளைத் தெரிவிப்பதாகக் கூறப்பட்டுள்ளது. முன்னதாக, ஈரானிலிருந்து இந்தியர்களை சிறப்பு விமானங்கள் மூலம் அழைத்து வருவதற்காக மட்டும், அந்நாடு தனது வான்வழியைத் திறந்தது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் 2 நாட்களுக்கு வெப்பம் அதிகரிக்கும்

## சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை


சென்னை, ஜூன் 22-

**சென்னை மற்றும் பல பகுதிகளில் 2 நாட்களுக்கு வெப்பம் அதிகரிக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, 27-ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அடுத்த 2 நாட்கள் அதிக வெப்பநிலை இருக்கும். இதனால் தமிழகம் மற்றும் புதுவையில் ஒரு சில பகுதிகளில் அசௌகரியம் ஏற்படலாம். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 37-38 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28-29 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| - 182.01 பாயிண்ட் | - 82.90 பாயிண்ட் |
| 81,541.01 | 24,750.70 |



**தங்கம்**
1 சவரன் ₹71,360
1 கிராம் ₹8,920




**வெள்ளி**
1 கிலோ ₹111,000
1 கிராம் ₹111.00



**டாலர்** ₹85.56

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



### இந்தியா - பாக். போரை நிறுத்தியதற்காக
# எனக்கு அமைதிக்கான நோபல் கிடைக்காது: ட்ரம்ப் ஆதங்கம்

**வாஷிங்டன், ஜூன் 22-**



இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான போரை நிறுத்தியதற்காக எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காது. நான் என்ன செய்தாலும் எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காது என அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ட்ரூத் சமூக வலைதளத்தில் டொனால்டு ட்ரம்ப் வெளியிட்ட பதிவில், ' காங்கோ ஜனநாயகக் குடியரசுக்கும், ருவாண்டா குடியரசுக்கும் இடையே, பல தசாப்தங்களாக நடந்து வரும், வன்முறை ரத்தக்களரி மற்றும் உயிரிழப்புகளை ஏற்படுத்திய போரில், வெளியுறவுச் செயலாளர் மார்கோ ரூபியோவுடன் சேர்ந்து, ஒரு சிறப்பான ஒப்பந்தத்தை நான் ஏற்பாடு செய்துள்ளேன் என்பதை அறிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

ருவாண்டா மற்றும் காங்கோவின் பிரதிநிதிகள் திங்கட்கிழமை வாஷிங்டனில் ஆவணங்களில் கையெழுத்திடுவார்கள். இது ஆப்பிரிக்காவிற்கும், வெளிப்படையாகச் சொன்னால், உலகிற்கும் ஒரு சிறந்த நாள்! இதற்காக எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காது.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான போரை நிறுத்தியதற்காக எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காது. செர்பியாவிற்கும் கொசோவோவிற்கும் இடையிலான போரை நிறுத்தியதற்காக எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காது. எகிப்துக்கும் எத்தியோப்பியாவிற்கும் இடையில் அமைதியைப் பேணுவதற்காக எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காது. மேலும் மத்திய கிழக்கில் ஆபிரகாம் ஒப்பந்தங்களைச் செய்ததற்காக எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காது.

ரஷ்யா/உக்ரைன், இஸ்ரேல்/ஈரான் உட்பட நான் என்ன செய்தாலும், அதற்கான விளைவுகள் என்னவாக இருந்தாலும் எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காது. ஆனால் மக்களுக்கு நான் செய்தது தெரியும், எனக்கு அவ்வளவுதான் முக்கியத்துவம்' எனத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி சமீபத்திய ட்ரம்ப் உடனான உரையாடலின்போது, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான போர்நிறுத்தம் நேரடி ராணுவப் பேச்சுவார்த்தையால் ஏற்பட்டது என்றும், அமெரிக்கா ஒருபோதும் மத்தியஸ்தம் செய்யவில்லை என்றும் தெரிவித்தார்.

இந்த சூழலில் மீண்டும் ட்ரம்ப், இந்தியா பாகிஸ்தான் போரை தானே நிறுத்தியதாக கூறியுள்ளது சலசலப்பை உருவாக்கியுள்ளது

# ஈரானின் முக்கிய தளபதி கொலை: இஸ்ரேல் அறிவிப்பு

**தெஹ்ரான், ஜூன் 22-**

ஈரானின் புரட்சிகர காவல்படை ட்ரோன் படைப் பிரிவின் முக்கிய தளபதி கொல்லப்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் அறிவித்துள்ளது. இஸ்ரேலை நோக்கி நூற்றுக்கணக்கான ஆளில்லா ட்ரோன்களை ஏவுவதில் முக்கிய பங்கு வகித்த இந்த தளபதியை கொல்ல இஸ்ரேலிய ராணுவம் போர் விமானங்களைப் பயன்படுத்தின.

இஸ்ரேல் ராணுவத்தின் அறிக்கையின்படி, 'ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் மூத்த தளபதி கொல்லப்பட்டுள்ளார். அவரது பெயர் அமின் பௌர் ஜோட்கி. புரட்சிகர காவல்படையின் இரண்டாவது யூ.ஏ.வி. ட்ரோன் படைப் பிரிவின் கமாண்ட் தளபதியாக அவர் பதவி வகித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. இஸ்ரேல் - ஈரான் போர் தொடங்கிய ஒன்பது நாட்களில் இஸ்ரேலால் கொல்லப்பட்ட 7-வது உயர் மட்ட ஈரானிய தளபதி இவர் ஆவார்.

ஈரானின் ட்ரோன்கள், இந்த மோதலில் ஒரு முக்கிய பகுதியாக உள்ளது. அவை இஸ்ரேலின் பல பகுதிகளில் கடுமையான சேதத்தை உருவாக்கியுள்ளன. ஈரானின் ட்ரோன்களை கண்டறிந்து, கண்காணிக்கவும் மற்றும் வீழ்த்துவதற்கும் நிறைய ஆயுதங்களையும், ராணுவ வீரர்களையும் இஸ்ரேல் பயன்படுத்தி வருகிறது. தற்போது இரு தரப்பிலும் ஏவுகணைத் தாக்குதல்கள் அதிகரித்து வரும் நிலையில் ஈரான் தளபதி ஒருவர் கொல்லப்பட்டது, அந்த நாட்டுக்கு பெரும் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது.

### போர் பதற்றம் சூழ்ந்த ஈரானிலிருந்து
# இந்தியர்கள் 1000 பேரை அழைத்து வர ஏற்பாடு

**புதுடெல்லி, ஜூன் 22-**

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையே போர் பதற்றம் அதிகரித்து வருவதால், ஈரான் நாட்டிலிருந்து தனது நாட்டினரை பாதுகாப்பாக அழைத்துவர இந்திய அரசு ஆபரேஷன் சிந்துவை தொடங்கியுள்ளது. இந்தியாவின் வேண்டுகோளை ஏற்று, ஈரான் தனது வான்வெளியை திறந்துள்ளது. இதனையடுத்து ஆபரேஷன் சிந்து திட்டத்தின் ஒரு பகுதியாக, ஈரானில் இருந்து மஹான் ஏர் நிறுவனத்தின் தனி விமானங்கள் மூலம் சுமார் *1000* இந்திய மாணவர்கள் திரும்ப அழைத்து வரப்படுகின்றனர்.

ஈரானின் மஷாத்தில் இருந்து *290* இந்திய மாணவர்களை ஏற்றி வந்த முதல் விமானம் வெள்ளிக்கிழமை இரவு *11.40* மணியளவில் டெல்லியில் தரையிறங்கியது. அஷ்காபத்தில் இருந்து இந்திய மாணவர்களை ஏற்றி வரும் இரண்டாவது விமானம் நேற்று காலை சுமார் *10* மணியளவில் தரையிறங்கியது. மூன்றாவது விமானம் நேற்று மாலை டெல்லியில் தரையிறங்கியது.

முன்னதாக இந்த நடவடிக்கை குறித்து பேசிய ஈரான் தூதரகத்தின் துணைத் தலைவர் முகமது ஜவாத் ஹொசைனி, "நாங்கள் இந்தியர்களை எங்கள் சொந்த மக்களாகக் கருதுகிறோம். ஈரானின் வான்வெளி மூடப்பட்டுள்ளது, ஆனாலும் இந்தப் பிரச்சினை காரணமாக, இந்திய நாட்டினரின் பாதுகாப்பான பயணத்திற்காக ஈரான் வான்வெளியை திறக்க ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். முதல் விமானம் புதுடெல்லி விமான நிலையத்தில் தரையிறங்கும், சனிக்கிழமை மேலும் இரண்டு விமானங்கள் தரையிறங்கும்." என்று தெரிவித்தார்.

### சமையலின் ஆஸ்கார் விருது:
# தமிழருக்கு கனிமொழி எம்.பி. பாராட்டு

**சென்னை, ஜூன் 22-**

சிறந்த சமையல் கலைஞருக்கான விருதைத் தமிழ்நாட்டை சேர்ந்த செப் விஜயகுமார் வென்றுள்ள நிலையில் அவருக்கு கனிமொழி எம்.பி. பாராட்டு தெரிவித்துள்ளார்.

சிகாகோவில் நடைபெற்ற விழாவில் நியூயார்க்கின் சிறந்த சமையல் கலைஞருக்கான விருதைத் தமிழ்நாட்டை சேர்ந்த செப் விஜயகுமார் வென்றுள்ளார். இந்த நிலையில், தமிழ்நாட்டை சேர்ந்த செப் விஜயகுமாரை பாராட்டி, திமுக துணை பொதுச் செயலாளரும், மக்களவைக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, தனது எக்ஸ் சமூக வலையதள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில், நத்தத்தின் புகையூட்டும் சமையலறைகளிலிருந்து ஜேம்ஸ் பியர்ட் மேடையின் புகழ் வெளிச்சத்துக்குக் கொண்டு சென்றிருக்கும் விஜய் குமார், உங்கள் பயணம் தமிழர்களின் வரலாற்றில் ஒரு மைல்கல். எளிமையான நமது பாரம்பரிய வேர்களிலிருந்து, காலத்தைக் கடந்து நிற்கும் பெருமிதத்திற்கு நீங்கள் வந்தடைந்துள்ளீர்கள். ஒருநாள் உங்களைச் சந்திக்கவும், கடல்கள் கடந்து கொண்டு தாங்கள் கொண்டு சென்றுள்ள உயிர்ப்புமிக்க அந்த உணவைச் சுவைத்திடவும், நான் ஆவலோடு உள்ளேன்.என தெரிவித்துள்ளார்

### கொடிக்கம்பங்கள் அகற்றம் தொடர்பாக
# எதிரான மார்க்சிஸ்ட் வழக்கு: உயர்நீதிமன்ற கிளை தள்ளுபடி

**மதுரை, ஜூன் 22-**

தமிழகத்தில் மார்க்சிஸ்ட் கொடிக் கம்பங்களை அகற்றும் அரசின் நடவடிக்கைக்கு தடை கோரிய வழக்கை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை தள்ளுபடி செய்தது.

மதுரை அ.தி.மு.க., நிர்வாகி கதிரவன்,'பழங்காநத்தம் பைபாஸ் ரோடு ஜெயம் தியேட்டர் எதிரே பஸ் ஸ்டாப் உள்ளது. அங்கு அ.தி.மு.க.,கொடிக் கம்பம் நட அனுமதி வழங்க உத்தரவிட வேண்டும்,' என மனு தாக்கல் செய்தார். இதுபோல் மேலும் சில மனுக்கள் தாக்கலாகின. ஜன., *27* ல் நீதிபதி ஜி.கே. இளந்திரையன், 'அனைத்து வழக்குகளும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

தேசிய, மாநில நெடுஞ்சாலைத்துறைகள், உள்ளாட்சி அமைப்புகள், அரசின் இதர துறைகளுக்கு சொந்தமான பொது இடங்களில் நிறுவப்பட்டுள்ள அரசியல் கட்சிகள், ஜாதி, மதம் சார்ந்த அமைப்புகளின் கொடிக் கம்பங்களை *12* வாரங்களில் அகற்ற வேண்டும்,' என உத்தரவிட்டார்.

இதை எதிர்த்து அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் நிறுவனர் அம்மாவாசிதேவர் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார். அதை மார்ச் *6* ல் இரு நீதிபதிகள் அமர்வு தள்ளுபடி செய்தது. இதை மறு சீராய்வு செய்ய மனு தாக்கல் செய்ய அனுமதிக்க மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் சண்முகம் மனு தாக்கல் செய்தார். தனி நீதிபதியின் உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு மனு தாக்கல் செய்தார்.

இரு மனுக்களும் நிலுவையில் உள்ளன. சண்முகம், 'மதுரை மற்றும் மாநிலத்தின் பிற பகுதிகளில் மார்க்சிஸ்ட் கொடிக் கம்பங்களை அகற்றும் அரசின் நடவடிக்கைக்கு தடை விதிக்க வேண்டும்,' என மற்றொரு மனு செய்தார். நீதிபதி சி.சரவணன் தள்ளுபடி செய்தார்.

### கருணைக் கொலைக்கு
# பிரிட்டன் நாடாளுமன்றம் ஒப்புதல்

**பிரிட்டன், ஜூன் 22-**

கொடூர நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களின் வாழ்வை முடித்துக் கொள்வதற்கு அனுமதி அளிப்பதற்கான சட்ட மசோதா பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டது.

நாடாளுமன்ற கீழவையில் நடைபெற்ற இதற்கான வாக்கெடுப்பில், மசோதாவுக்கு ஆதரவாக *314* எம்.பி.க்களும் எதிராக *291* எம்.பி.க்களும் வாக்களித்தனர். இதற்குப் பிறகு அந்த மசோதா மேலவைக்குக் கொண்டு செல்லப்படும். அங்கு அந்த மசோதாவில் திருத்தங்கள் மேற்கொள்ளவோ, சட்டமாக்கலை தாமதப்படுத்தவோ மட்டும்தான் முடியும். கீழவை நிறைவேற்றிய மசோதாக்களை மேலவையால் நிராகரிக்க முடியாது.




இந்த மசாதா சட்டமாக்கப்பட்டால், பிரிட்டனின் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பகுதிகளில் வசிக்கும் *18* வயதுக்கு மேற்பட்ட, குணப்படுத்த முடியாத கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள நபர்கள் மருத்துவர்களின் உதவியுடன் தங்களது உயிரை மாய்த்துக் கொள்ள விண்ணப்பிக்க முடியும். அதற்கான மருந்தை தாங்களாகவே உட்கொள்ளும் திறன் நோயாளிகளுக்கு இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ட்ரம்ப் நினைத்தால் போரை முடிவுக்கு கொண்டுவரலாம்
### ஈரான் அதிபரின் ஆலோசகர் கருத்து

**தெஹ்ரான், ஜூன் 22-**

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் நினைத்தால், ஒரே ஒரு தொலைபேசி அழைப்பின் மூலம் ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே நடந்து வரும் மோதலை நிறுத்த முடியும் என ஈரான் தெரிவித்துள்ளது.

தனியார் தொலைக் காட்சி ஒன்றிடம் பேசிய ஈரான் அதிபரின் ஆலோசகர் மஜித் ஃபராஹானி, "அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நினைத்தால் ஒரே ஒரு தொலைபேசி அழைப்பு மூலம் இஸ்ரேல் - ஈரான் போரை எளிதாக நிறுத்த முடியும். ஈரான் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை கொண்டுள்ளது. ஆனால் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் வரை, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்த பேச்சுவார்த்தையும் நடத்த முடியாது.

டொனால்டு ட்ரம்ப் இஸ்ரேலின் வான்வழி குண்டுவீச்சுகளை நிறுத்த அழுத்தம் கொடுக்க வேண்டும். அத்தகைய நடவடிக்கை ராஜதந்திர பேச்சுவார்த்தைகளுக்கு வழி வகுக்கும்." என்று கூறினார்.

ஐரோப்பிய வெளியுறவு அமைச்சர்களுடன் உயர்மட்ட பேச்சுவார்த்தைகளுக்காக ஜெனீவாவுக்கு பயணம் செய்துள்ள ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி, 'இஸ்ரேல் முதலில் அதன் தாக்குதல்களை நிறுத்தாவிட்டால் அமெரிக்காவுடன் அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைக்கு சாத்தியமில்லை' என்று வலியுறுத்தினார்.

# இஸ்ரேலிடம் போரை நிறுத்த சொல்வது மிகவும் கடினம்
### அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மழுப்பல்

**வாஷிங்டன், ஜூன் 22-**

இஸ்ரேல் போர் நிறுத்த சொல்வது கடினம் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்தார்.

ஒப்பீட்டளவில் இஸ்ரேல் சிறப்பாக போர் புரிகிறது என்றும், போரை நிறுத்துமாறு அந்நாட்டிடம் கோருவது இப்போதைக்கு கடினம் என்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.


இஸ்ரேல் - ஈரான் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், போர் நிறுத்தம் மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் குறித்து ஐரோப்பிய நாடுகள் ஆலோசனை மேற்கொண்டு வருகின்றன. இஸ்ரேல் போரை நிறுத்தினால், தானும் நிறுத்திக்கொள்வதாக ஈரான் தெரிவித்துள்ளது. தாக்குதல்களை நிறுத்துமாறு இஸ்ரேலிடம் அமெரிக்கா தெரிவிக்க முடியும் என்றும் ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரானின் இந்த கருத்து குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த டொனால்ட் ட்ரம்ப், "இப்போது அந்த கோரிக்கையை வைப்பது மிகவும் கடினம் என்று நான் நினைக்கிறேன். ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களைப் பார்க்கும்போது நிறுத்துவது மிகவும் கடினம். இஸ்ரேல் சிறப்பாக போர் புரிகிறது. ஈரானின் செயல்பாடு குறைவாகவே உள்ளது என்று நீங்கள் கூறுவீர்கள் என்று நான் நினைக்கிறேன். யாரையாவது நிறுத்தச் சொல்வது கொஞ்சம் கடினம்.

ஒருவர் வெற்றிபெறக்கூடிய நிலையிலும், ஒருவர் தோற்கும் நிலையிலும் இருக்கும்போது போர் நிறுத்தம் என்பது சற்று கடினம். எனினும், போர் நிறுத்தம் ஏற்பட நாங்கள் தயாராகவும், விருப்பமாகவும் இருக்கிறோம். நாங்கள் ஈரானுடன் பேசி வருகிறோம், என்ன நடக்கிறது என பார்ப்போம்." என்று தெரிவித்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதத்தை உருவாக்கவில்லை என்று அமெரிக்கா நம்புவதாக தேசிய புலனாய்வு இயக்குநரான துளசி கப்பார்ட் கூறியது குறித்த கேள்விக்கு பதில் அளித்த டொனால்டு ட்ரம்ப், "அப்படியானால், அமெரிக்க உளவுத்துறையில் இருப்பவர்கள் தவறான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். துளசி கப்பார்ட் கூறியது தவறு" என தெரிவித்தார்.

**22-06-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** எல்லா விதத்திலும் ஏற்றம் தரும் நாள். இனிமையான, மற்றும் சாதுர்யமான பேச்சாற்றலால் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும்.

**ரிஷபம்:-** நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். மனைவியின் கலகத்தால், உறவுக்குள் குழப்பம் உண்டாகும். அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் பணியிடத்தில் சாதகமான சூழல் உருவாகும்.

**மிதுனம்:-** ஆரோக்கியம் மேம்படும். தனவரவு அதிகரிக்கும், பெண்களிடம் எதிர்பார்ப்பது லாபங்கள் கிடைக்கும். டாக்டர்கள் கைவிட்ட கேஸ் கூட துள்ளி எழும். நோய் நீங்கி சுகம் ஏற்படும்.

**கடகம்:-** வேலை இல்லாதவர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடிவரும். நினைப்பதெல்லாம் நினைத்தபடி நடக்கும். வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும். தனவரவு கூடும்.

**சிம்மம்:-** பக்தி மார்க்கத்தில் மனம் லயிக்கும். தெய்வ பக்தியால் மனநிம்மதி கூடும். புத்திர பாக்கியம் ஏற்படும். திருவருளாலும், குருவருளாலும் வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

**கன்னி:-** வழக்கு விவகாரங்கள் தள்ளிப் போடுவது நல்லது. உயர் அதிகாரிகளிடம் பணிவோடு நடந்தால் மட்டுமே பதவி உயர்வும் கிடைக்கும். எதிலும் நிதானமாக நடக்க வேண்டிய சந்திராஷ்டம நாள். எச்சரிக்கை தேவை.

**துலாம்:-** பேச்சால் பெருமாளையும் அசத்தி விடுவார்கள். அப்படி இருக்கையில் வருமானத்திற்கு கேட்கவேண்டுமா? வளமான வாழ்வும், வாகன யோகமும் உண்டு. வியாபாரத்தில் கவனத்துடன் செயல்பட்டால் இழப்பைத் தவிர்க்கலாம்.

**விருச்சிகம்:-** வம்பு செய்தவர் வழிவிட்டு ஒதுங்குவர். கேட்காமலே உதவ முன்வருவர் நண்பர்கள். வீடு, மனை வாங்கும் எண்ணங்கள் மனதில் எழும். அதற்காக எதிர்பார்த்த கடன்கள் எளிதில் கிடைக்கும்.

**தனுசு:-** பங்குச்சந்தை விவகாரங்களில் நாட்டம் ஏற்படும். எவ்வளவு நன்றாக உழைத்தாலும் நல்ல பெயர் எடுக்க முடியாது. உங்கள் உடைமைகளை பாதுகாப்புடன் வைத்துக் கொள்வது நல்லது.

**மகரம்:-** அன்னையின் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்ளுங்கள். முன்னேற முயலுங்கள். வெற்றி உங்கள் பக்கம். வயிறு சம்பந்தமான உபாதைகள் எழலாம். எதிரிகளிடம் எச்சரிக்கையாக இருக்கவும்.

**கும்பம்:-** எல்லா முயற்சிகளிலும் எளிதில் வெற்றி கிட்டும். மனதில் மகிழ்ச்சியும் தெம்பும் அதிகரிக்கும். குழந்தைகள் பால் அன்பைப் பொழிவார்கள். புதிய நண்பர்களின் உதவி கிடைக்கும்.

**மீனம்:-** நிம்மதி என்றால் என்ன என்று தேடவேண்டிய நிலை ஏற்படும். பெண்களால் பணவிரயம் ஏற்படும். இயலாமையால் அனைவரின் மேலும் ஒரு தேவையற்ற வெறுப்பு ஏற்படும்.

# அமைதிக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள்: இஸ்ரேல், ஈரானுக்கு ஐ.நா. வலியுறுத்தல்

**ஜெனீவா, ஜூன் 22-**

இஸ்ரேல் - ஈரான் இடையேயான போரில் அமைதிக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள் என ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் கூறியுள்ளார்.

இஸ்ரேல் - ஈரான் இடையேயான போர் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது. போரை நிறுத்த வேண்டும் என்று இஸ்ரேல் மற்றும் ஈரானின் ஆதரவு நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. இந்நிலையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் இஸ்ரேல் - ஈரான் போர் தொடர்பாக ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் பேசுகையில்:-

இரு நாடுகளுக்கு இடையேயான போர் என்பது யாராலும் கட்டுப்படுத்த முடியாத தீயைப் பற்ற வைக்கும். அதை நாம் பரவ விடக் கூடாது. அமைதியை ஏற்படுத்த ஒரு வாய்ப்பு கொடுங்கள். போர் பதட்டத்தை உடனடியாக குறைக்க வேண்டும். போரை நிறுத்துவது அந்தந்த நாடுகளின் தலைவிதியை மட்டுமல்ல, ஒட்டுமொத்த எதிர்காலத்தின் தலைவிதியை மாற்ற உதவும். போர் மேலும் மேலும் அதிகமாக நாம் அனுமதிக்கக் கூடாது. இந்த மோதல் கணிக்க முடியாததாக உள்ளது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்குள் ஒற்றுமை மற்றும் ஐ.நா. சாசனத்தை பின்பற்ற வேண்டும்" என்று தெரிவித்தார்.

முன்னதாக நடைபெற்ற ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் இஸ்ரேல், ஈரான் நாட்டின் பிரதிநிதிகள் தங்களுடைய குற்றச்சாட்டுகளை தெரிவித்தனர். ஈரான் மீதான தாக்குதல்களை நிறுத்த மாட்டோம் என்று இஸ்ரேல் கூறிய நிலையில், குற்றங்களுக்கு இஸ்ரேல் பொறுப்பேற்றால் அணுசக்தி பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்போம் என ஈரான் கூறியுள்ளது.

# தங்கம் விலை மீண்டும் உயர்வு

**சென்னை, ஜூன 22-**

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று *(ஜூன் 21)* பவுனுக்கு ரூ.*200* என உயர்ந்து விற்பனையானது. இதனால் ஒரு பவுன் தங்கம் ரூ.*73,880*-க்கு விற்பனை ஆகிறது. நேற்று ஒரு பவுன் தங்கம் ரூ.*73,680*-க்கு விற்பனையானது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு அடிப்படையில் இந்தியாவில் தங்கம் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அதோடு உலக நாடுகளின் வர்த்தக ரீதியான செயல்பாடும் தங்கத்தின் விலையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதன்படி, தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது.

இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான மோதல் நேற்று 9-வது நாளை எட்டிய நிலையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ளது. இது உலக அளவில் பொருளாதார ரீதியாக பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என துறை சார்ந்த வல்லுநர்கள் கூறியுள்ளனர். இந்நிலையில், தங்கம் விலை நேற்று உயர்ந்து விற்பனையானது.

சென்னையில் *22* காரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று *(ஜூன் 21)* கிராமுக்கு ரூ.*25* உயர்ந்து, ஒரு கிராம் ரூ.*9,235*-க்கும், பவுனுக்கு ரூ.*200* உயர்ந்து ஒரு பவுன் தங்கம் ரூ.*73,880*-க்கும் விற்பனையானது. நேற்று முன்தினம் ஒரு கிராம் ரூ.*55* என குறைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இந்தச் சூழலில் நேற்று தங்கம் விலை ஏற்றம் கண்டது. நேற்று சென்னையில் *24* காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.*27* உயர்ந்து, ஒரு கிராம் ரூ.*10,075*-க்கு விற்பனையானது. ஒரு கிலோ வெள்ளி ரூ.*1,20,000*-க்கு விற்பனையானது.

# தற்கொலை படை தாக்குதல்: நைஜீரியாவில் 10 பேர் பலி

**நைஜீரியா, ஜூன் 22-**

நைஜீரியாவின் வடக்கிழக்கு மாநிலத்திலுள்ள உணவகத்தில் தற்கொலைப் படை குண்டு வெடிப்பில் *10* பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொர்னோ மாநிலத்தின் கொண்டூங்கா பகுதியில், நேற்று முன்தினம் மாலை வெடிகுண்டு கட்டி வந்த அடையாளம் தெரியாத நபர் அதை வெடிக்கச் செய்ததில், *10* பேர் கொல்லப்பட்டதாகவும் ஏராளமானோர் படுகாயமடைந்ததாகவும் கூறப்படுகிறது. நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதிகளில், பெரும்பாலான தாக்குதல்களை போகோ ஹராம் உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புகள் நடத்தி வருகின்றன. ஆனால், இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தவொரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, நைஜீரியாவைச் சேர்ந்த இஸ்லாமிய கிளர்ச்சியாளர் அமைப்பான போகோ ஹராம் கடந்த *2009*-ம் ஆண்டு முதல் அந்நாட்டின் பல முக்கிய நகரங்களை அச்சுறுத்தி வருகின்றது. இதனால், அந்நாட்டில் சுமார் *35* ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன், *20* லட்சத்துக்கும் மேலான மக்கள் இடமாற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# வால்பாறை அ.தி.மு.க. எம்.எல்.ஏ. மறைவு ஓ.பன்னீர்செல்வம் இரங்கல்

**சென்னை, ஜூன் 22-**

அ.தி.மு.க. எம்.எல்.ஏ. வால்பாறை கந்தசாமி மறைவுக்கு ஓ.பி.எஸ். இரங்கல் தெரிவித்துள்ளார்இது குறித்து அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்பு குழு ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீரசெல்வம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

அ.தி.மு.க. வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் அன்புச் சகோதரர் அமுல் . கந்தசாமி உடல் நலக் குறைவு காரணமாக காலமானார் என்ற செய்தியறிந்து ஆற்றொணாத் துயரமும், மிகுந்த மன வேதனையும் அடைந்தேன். அன்புச் சகோதரர் கந்தசாமியை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் ஓ.பி.எஸ். குறிப்பிட்டுள்ளார்.

# புதுப்பொலிவு கண்ட வள்ளுவர் கோட்டம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சி



**சென்னை, ஜூன் 22-**
வள்ளுவர் கோட்டம் புதுப்பொலிவு கண்டுள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

ரூ.80 கோடியில் புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தை பொதுமக்களின் பார்வைக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று மாலை திறந்து வைத்தார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் சமூகவலைதளத்தில் பதிவிட்டு இருப்பதாவது.

தமிழரின் அடையாளங்களை எங்கும் நிறுவிய தலைவர் கலைஞரின் கனவுப் படைப்பான வள்ளுவர் கோட்டம் புதுப்பொலிவு கண்டுள்ளது. அனைவருக்கும் பொதுவான வள்ளுவரையும் - வள்ளுவத்தையும் போற்றுவோம்! மானிடச் சமுதாயம் முழுக்கக் கொண்டு சேர்ப்போம். இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

**தர்மபுரி, ஜூன் 22-**
ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து வினாடிக்கு 20 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்ததன் காரணமாக கர்நாடக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து கன மழை பெய்து வருகிறது. இதனால் கர்நாடக அணைகளான கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. கடந்த 18-ந்தேதி கபினி அணையில் இருந்து வினாடிக்கு 25 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால் தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரித்தது.

கடந்த 3 தினங்களுக்கு முன்பு ஒகேனக்கல்லுக்கு வினாடிக்கு 6 ஆயிரத்து 500 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. இந்த நீர்வரத்து படிப்படியாக அதிகரித்தது. நேற்று காலை நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு 20 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது. இதன் காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் தண்ணீர் கரைபுரண்டு ஓடியது. மேலும் ஒகேனக்கல்லில் உள்ள ஐந்தருவி, மெயின் அருவி, சினி பால்ஸ், உள்ளிட்ட அருவிகளிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. இதையடுத்து சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி அருவி மற்றும் கரையோரங்களில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

# நமது கலாச்சாரம், பண்பாட்டின் அடையாளம் முருகப்பெருமான்

## தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி பெருமிதம்



**மதுரை, ஜூன் 22-**
மதுரையில் நடைபெறும் முருக பக்தர்கள் மாநாடு அரசியலுக்கு அப்பாற்பட்டது. நமது கலாச்சாரம், பண்பாட்டின் அடையாளம் முருகப் பெருமான் என தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார்.

மதுரை வண்டியூர் டோல்கேட் அருகே உள்ள மைதானத்தில் இந்து முன்னணி சார்பில் முருக பக்தர்கள் மாநாடு இன்று (ஜூன் 22) நடைபெறுகிறது. அதனையொட்டி மாநாட்டு வளாகத்தில் அறுபடை வீடுகளின் மாதிரி கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயில்களில் முருகனின் அறுபடை வீடுகளில் பூஜை செய்யப்பட்ட வேல்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. தினமும் காலை, மாலையில் பூஜைகள் செய்து பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படுகிறது. தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகைதந்து தரிசனம் செய்கின்றனர்.

அதனையொட்டி மாதிரி அறுபடை வீடுகளில் தரிசனம் செய்ய தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி தரிசனம் செய்ய நேற்று காலை 10.40 மணியளவில் மாநாட்டு வளாகத்திற்கு வருகை தந்தார். அப்போது அவருக்கு இந்து முன்னணி மாநிலத்தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் தலைமையில் பூரண கும்ப மரியாதை அளித்து வரவேற்றனர். பின்னர் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி, முதல் படை வீடான திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி மாதிரி கோயிலில் வழிபட்டார்.

அப்போது தீபாராதனை காண்பித்து வழிபாடு செய்தார். அறுபடை வீடுகளுக்கும் சென்று சுவாமி தரிசனம் செய்தார்.

பின்னர் வெளியில் வந்த கூடியிருந்த பக்தர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். அறுபடை வீடு முன்பு நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "முருகன் நமக்கு முக்கியமான கடவுள், நமது அடையாளமாகத் திகழ்கிறார். சிவபெருமான் இந்தியா முழுமைக்குமான கடவுளாவார். உலகம் முழுவதுமுள்ள இந்துக்களின் தெய்வமாகத் திகழ்கிறார். அவரை தென்னாட்டுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று அழைப்போம். எல்லாமுமான சிவனின் குழந்தை முருகப்பெருமான்.

அவர் நமது பண்பாட்டின், கலாச்சாரத்தின் அடையாளம். நான் அனைத்து அறுபடை வீடுகளுக்கும் சென்றுள்ளேன். ஆனால் இங்கு அறுபடை வீடுகளையும் ஒரே இடத்தில் தரிசனம் செய்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த மாநாடு அரசியலுக்கு அப்பாற்பட்டது. இதனை ஒருங்கிணைத்த இந்து முன்னணிக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் இமய மலை அடிவாரத்திலுள்ள உத்தரகாண்ட் மாநிலத்தில் ஒரே இடத்தில் நான்கு புனித யாத்திரை தலங்கள் உள்ளன. அதுபோல் முருகப்பெருமானுக்கு அறுபடை வீடுகளில் ஒரே இடத்தில் தரிசனம் செய்யும் வகையில் அமைத்துள்ளதன் மூலம் பக்தர்களின் கனவு நிறைவேறியுள்ளது." என்றார்.

### போர் நடைபெறும் ஈரானில் இருந்து

# நேபாளம், இலங்கை மக்களையும் வெளியேற்ற இந்திய அரசு முடிவு

**புதுடெல்லி, ஜூன் 22-**
நேபாளம் மற்றும் இலங்கை அரசாங்கங்களின் வேண்டுகோளின் பேரில் அந்நாடுகளின் குடிமக்களை ஈரானில் இருந்து வெளியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று இந்தியா தெரிவித்துள்ளது. மேலும் 517 இந்தியர்கள் ஆபரேஷன் சிந்து மூலம் தாயகம் திரும்பியுள்ளனர்.

ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதை அடுத்து, ஈரானும் பதில் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதனால், ஈரானில் உள்ள வெளிநாட்டவர்கள் அந்நாட்டைவிட்டு வெளியேறி வருகிறார்கள். ஈரானில் உள்ள இந்தியர்களை அழைத்து வர ஆபரேஷன் சிந்து என்ற பெயரில் மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஈரானில் உள்ள இந்திய மாணவர்கள் மற்றும் மத யாத்ரீகர்கள் உட்பட 290 இந்தியர்கள் ஈரானில் இருந்து ஒரு தனி விமானம் மூலம் நேற்று முன்தினம் (ஜூன் 20) புதுடெல்லிக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதன் தொடர்ச்சியாக, துர்க்மெனிஸ்தானின் அஷ்காபாத்தில் இருந்து நேற்று (ஜூன் 21) அதிகாலை 3 மணிக்கு சிறப்பு விமானம் இந்தியர்கள் புதுடெல்லி அழைத்துவரப்பட்டனர். இதன் மூலம், இதுவரை 517 இந்தியர்கள் ஆபரேஷன் சிந்து மூலம் தாயகம் திரும்பியுள்ளனர்.

இந்நிலையில், ஈரானில் உள்ள நேபாளம் மற்றும் இலங்கை குடிமக்களை வெளியேற்ற முயற்சி மேற்கொள்ளப்படும் என்று இந்தியா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஈரானில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "நேபாளம் மற்றும் இலங்கை அரசாங்கங்களின் வேண்டுகோளின் பேரில், ஈரானில் உள்ள இந்திய தூதரகம், அந்த நாடுகளைச் சேர்ந்தவர்களையும் வெளியேற்ற முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஈரானில் உள்ள நேபாளம் மற்றம் இலங்கை நாட்டவர்கள் இந்திய தூதரகத்தைத் தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்து, தொலைபேசி எண்களையும் இந்திய தூதரகம் வெளியிட்டுள்ளது.

### அகமதாபாத் விமான விபத்து எதிரொலி:

# 3 முக்கிய அதிகாரிகளை நீக்க ஏர் இந்தியாவுக்கு அறிவுறுத்தல்

**புதுடெல்லி, ஜூன் 22-**
அகமதாபாத் விமான விபத்துக்கான காரணம் குறித்து ஆய்வு நடத்தி வரும் சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ), விமானக் குழுவினரை திட்டமிடுவது, இயக்குவது தொடர்பாக பல மீறல்கள் நிகழ்ந்துள்ளதாகக் கண்டறிந்துள்ளது. இதற்குக் காரணமான 3 அதிகாரிகளை அனைத்து பொறுப்புகளில் இருந்தம் நீக்குமாறு, ஏர் இந்தியாவுக்கு டிஜிசிஏ அறிவுறுத்தி உள்ளது.

கடந்த 12ம் தேதி குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இருந்து லண்டனுக்குப் புறப்பட்ட ஏர் இந்தியாவின் போயிங் 787-8 ட்ரீம்லைனர் விமானம், புறப்பட்ட சில நிமிடங்களிலேயே கீழே விழுந்து விபத்துக்குள்ளானது. விமானத்தில் பயணித்த 242 பேரில் 241 பேர் உயிரிழந்தனர். விமான விபத்துக்கான காரணம் தொடர்பாக ஆய்வு செய்து வரும் டிஜிசிஏ, ஏர் இந்தியாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளது.

அதில், விமான செயல்பாட்டுத் துறையின் உயர் நிர்வாகப் பிரிவு உட்பட மூன்று அதிகாரிகளை அவர்களின் பொறுப்புகளில் இருந்து நீக்குமாறு உத்தரவிட்டுள்ளது. மேலும், இந்த அதிகாரிகள் மீது தாமதமின்றி உள் ஒழுங்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

உரிமம், ஓய்வு, சமீபத்திய தேவைகளில் குறைபாடுகள் இருந்துள்ளன. இவை மட்டுமின்றி, விமானக் குழுவினரை திட்டமிடுவது, இயக்குவது ஆகியவற்றில் பல மீறல்கள் நிகழ்ந்துள்ளன." என்று அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விமானக் குழுவினர் தொடர்பான திட்டமிடலுக்கான மென்பொருள் கடந்த ஆண்டு மே மாதம் மாற்றப்பட்டது ஆய்வில் தெரிய வந்துள்ளது.

ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என டிஜிசிஏ கோரிய முக்கிய அதிகாரிகளில் ஒருவர், ஒருங்கிணைந்த செயல்பாட்டுக் கட்டுப்பாட்டு மையத்தின் துணைத் தலைவர் ஆவார். ஐ.ஓ.சி.சி. என்பது ஒரு விமான நிறுவனத்தின் நரம்பு மண்டலம் போன்றதாகும். இது பாதுகாப்பான, திறமையான மற்றும் சட்டபூர்வமான முறையில் விமானங்கள் இயக்கப்படுவதை உறுதி செய்வதற்கானது. விமானிகள் மற்றும் கேபின் குழுவினர், அவர்களின் பட்டியல்கள் உட்பட ஒரு விமான நிறுவனத்தின் அனைத்து துறைகளும் இதன் கீழ் வருகிறது.

டிஜிசிஏவின் இந்த உத்தரவை நிறைவேற்றி இருப்பதாக ஏர் இந்தியா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய ஏர் இந்தியா செய்தித் தொடர்பாளர் ஒருவர், நாங்கள் ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவை ஒப்புக்கொள்கிறோம். உத்தரவை செயல்படுத்தியுள்ளோம். ஒருங்கிணைந்த செயல்பாட்டுக் கட்டுப்பாட்டு மையத்தை நிறுவனத்தின் தலைமை செயல்பாட்டு அதிகாரி நேரடியாக மேற்பார்வை இடுவார். பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் நிலையான நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றுவதை உறுதி செய்வதில் ஏர் இந்தியா உறுதிபூண்டுள்ளது என்று கூறியுள்ளார்.

# பீகாரில் முதியோர், மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம் ரூ.1,100 ஆக உயர்வு: நிதிஷ்

**பீகார், ஜூன் 22-**
பீகாரில் இந்த ஆண்டு சட்டமன்ற தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் விதவைகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் ரூ.400-ல் இருந்து ரூ.1,100 ஆக அதிகரிக்கப்பட்டிருப்பதாக அம்மாநில முதல்வர் நிதிஷ் குமார் தெரிவித்துள்ளார்.

பீகார் தேர்தல் இந்த ஆண்டு அக்டோபர் அல்லது நவம்பரில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தேர்தலில் ஆர்ஜேடி- காங்கிரஸ் கூட்டணி, ஜேடியு- பாஜக கூட்டணி, ஜன் சுராஜ் என மும்முனை போட்டி நிலவும் என்றும் கணிக்கப்படுகிறது. தேர்தலுக்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. அதோடு, என்டிஏ-வில் சரணடைந்துள்ள நிதிஷ் குமார், தனது முதல்வர் பதவியை தக்கவைத்துக் கொள்ள தீவிரமாக களப்பணி ஆற்றி வருகிறார்.

இந்நிலையில், ஐக்கிய ஜனதா தள தலைவர் நிதிஷ் குமார் தனது எக்ஸ் தளத்தில், "சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பீகாரில் முதியோர் , மாற்றுத்திறனாளிகள் மற்றும் விதவைகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ. 400-ல் இருந்து ரூ.1,100 ஆக உயர்த்தி வழங்கப்படும் என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த ஓய்வூதிய உயர்வு ஜூலை மாதம் முதல் அமலுக்கு வரும். இத்தொகை ஒவ்வொரு மாதத்திலும் 10 ஆம் தேதி அன்று அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். இது 1 கோடியே 9 லட்சத்து 69 ஆயிரத்து 255 பயனாளிகளுக்கு பெரிதும் உதவிகரமாக இருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

மேலும், சமூகத்தின் ஒரு விலைமதிப்பற்ற அங்கமாக முதியவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்வதே எங்களின் முதன்மையான நோக்கம். மாநில அரசு இந்த திசையில் தொடர்ந்து பயணிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### உடல்நலக் குறைவால்

# வால்பாறை எம்.எல்.ஏ.,காலமானார்

**கோவை, ஜூன் 22-**
வால்பாறை தொகுதி எம்.எல்.ஏ., அமுல் கந்தசாமி, 60, நேற்று உடல்நலக் குறைவால் காலமானார்.



கோவை மாவட்டம் அன்னூரை சேர்ந்தவர் அமுல் கந்தசாமி, 60. வால்பாறை தொகுதி அ.தி.மு.க., எம்.எல்.ஏ., ஆகவும்,எம்ஜிஆர் இளைஞர் அணி மாநில துணை செயலாளராகவும் பணியாற்றி வந்தார். புற்றுநோய் காரணமாக, அமுல் கந்தசாமி கோவை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

அவரது உடல்நிலை மிகவும் மோசமாக இருப்பதாக நேற்று காலை தகவல் வெளியானது. அ.தி.மு.க. பொதுச் செயலாளர் இ.பி.எஸ்., உள்ளிட்ட முன்னணி நிர்வாகிகள் பலரும் நேரில் சென்று அவருக்கு சிகிச்சை அளிக்கப்படுவதை கேட்டறிந்தனர். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி அமுல் கந்தசாமி உயிரிழந்தார்.

மறைந்த அமுல் கந்தசாமிக்கு, கலைச்செல்வி என்ற மனைவியும், சுப நிதி என்ற மகளும் உள்ளனர். மகள் கோவை தனியார் கலை அறிவியல் கல்லூரியில் பட்டப்படிப்பு படித்து வருகிறார். சிறு வயது முதலே அ.தி.மு.க.வில் பணியாற்றிய அமுல் கந்தசாமி, ஒரு முறை மாவட்ட ஊராட்சி துணைத் தலைவராகவும், ஒருமுறை மாவட்ட கவுன்சிலர் ஆகவும் பணியாற்றி உள்ளார். கடந்த 2021ல் வால்பாறை தொகுதி எம்.எல்.ஏ., ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### சர்வதேச யோகா தின நிகழ்ச்சி:

# ஆந்திராவில் 2 உலக சாதனைகள்: சந்திரபாபு நாயுடு பெருமிதம்

**அமராவதி, ஜூன் 22-**
யோகா தின நிகழ்ச்சியில் ஆந்திராவில் 2 உலக சாதனை படைத்துள்ளது என சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

ஐ.நா சபையில் கடந்த 2014-ம் ஆண்டு உரையாற்றிய பிரதமர் மோடி, யோகாவின் நன்மைகளையும் பெருமையையும் எடுத்துக்கூறினார். அதனை சர்வதேச தினமாக கடைப்பிடிக்க வேண்டும் என அப்போது அவர் பரிந்துரைத்தார். இதற்கு 177 உறுப்பு நாடுகள் ஆதரவு அளித்தன. இதனை தொடர்ந்து, 2015-ம் ஆண்டு முதல் ஜூன் 21-ம் தேதியை சர்வதேச யோகா தினமாக ஐ.நா. சபை அறிவித்தது.

இந்நிலையில் 11-வது சர்வதேச யோகா தினம் நேற்று கொண்டாப்படுகிறது. 'ஒரே பூமி, ஒரே ஆரோக்கியம்' என்ற கருப்பொருளில், உலகில் உள்ள 191 நாடுகளில் யோகா நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் உள்ள விசாகப்பட்டினத்தின் ஆர்.கே.கடற்கரையில், பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் லட்சக்கணக்கானோர் கலந்து கொண்டு யோகா செய்தனர்.

இதனிடையே, யோகா தினத்தை முன்னிட்டு புதிய உலக சாதனையை படைக்கும் முயற்சியில் ஆந்திராவை ஆளும் தெலுங்கு தேசம் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மேற்கொண்டது. இந்த நிலையில், யோகா தின நிகழ்ச்சியின் மூலம் ஆந்திரா நேற்று 2 உலக சாதனைகளை படைத்துள்ளது என அந்த மாநிலத்தின் முதல் மந்திரி சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார். இது குறித்து பிரதமர் நரேந்திர மோடியுடன் யோகா செய்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய சந்திரபாபு நாயுடு, "நேற்று 3.03 லட்சம் பேர் ஒன்றாக கூடி யோகா பயிற்சி செய்தனர். ஒரே இடத்தில் அதிக அளவிலான மக்கள் யோகா செய்ததற்கான உலக சாதனையாக இது அமைந்துள்ளது" என்று தெரிவித்தார். இருப்பினும், யோகா நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களின் சரியான எண்ணிக்கையை கின்னஸ் உலக சாதனை அதிகாரிகள் அறிவிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. .

முன்னதாக குஜராத் மாநிலம் சூரத்தில் கடந்த 2023-ம் ஆண்டு நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் 1.47 லட்சம் பேர் பங்கேற்றதே இதுவரையிலான அதிகபட்ச சாதனையாக இருந்து வருகிறது. அந்த சாதனையை நேற்று முறியடித்துள்ளதாக ஆந்திர அரசு தெரிவித்துள்ளது.

இதே போல், "ஆந்திராவில் நேற்று ஒரே இடத்தில் சுமார் 22,000 பழங்குடியின மாணவர்கள் 108 நிமிடங்களில் 108 சூரிய நமஸ்காரங்களைச் செய்து, மற்றொரு சாதனையை படைத்தனர்" என்று சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார். மேலும் நேற்று யோகா செய்ய மாநிலம் முழுவதும் இருந்து சுமார் 2 கோடி பேர் பதிவு செய்வார்கள் என்று மாநில அரசு எதிர்பார்த்ததாகவும், ஆனால் அந்த எண்ணிக்கை 2.45 கோடியாக அதிகரித்ததாகவும் சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

# வால்பாறை அருகே சிறுத்தை தூக்கி சென்ற சிறுமி சடலமாக மீட்பு

**வால்பாறை, ஜூன் 22-**
வால்பாறை அருகே வீட்டின் முன் விளையாடிக் கொண்டிருந்த சிறுமியை தாய் கண் முன்னே, சிறுத்தை வெள்ளிக்கிழமை மாலை கவ்விச் சென்ற நிலையில், நேற்று சிறுமி சடலமாக மீட்கப்பட்டார்.

6 வயது சிறுமியை தாய் கண்முன்னே சிறுத்தை கவ்விச்சென்ற நிலையில், நேற்று முன்தினம் மாலை முதல் ட்ரோன் உதவியுடன் தீவிர தேடுதல் பணியில் காவல் துறையினரும் வனத் துறையினரும் ஈடுபட்டு வந்தனர்.

மோப்ப நாய்களும் வரவழைக்கப்பட்டு தேடும் பணி நடைபெற்று வந்தது. இந்த நிலையில், நேற்று காலை, சிறுமி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



கோவை மாவட்டம், வால்பாறை அருகே உள்ள பச்சமலை எஸ்டேட் பகுதியில் தாயின் கண் முன்னே சிறுமியை சிறுத்தை ஒன்று தூக்கிச் சென்றதில், சிறுமி பலியான சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அங்கு உள்ள காளியம்மன் கோவில் அருகே தொழிலாளர் குடியிருப்பு பகுதியில் விளையாடிக் கொண்டு இருந்த ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த மணோஜ்முந்தா மற்றும் மோனிகா தேவி தம்பதியரின் மகள் ரோஷினியை தேயிலைத் தோட்டத்தில் பதுங்கி இருந்த சிறுத்தை திடீரென பாய்ந்து தூக்கிச் சென்றது.

திடீரென கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்த இந்த சம்பவத்தால் குழந்தையின் தாய் அலறி அடித்துக் கொண்டு சப்தம் போட்டு உள்ளார். அவரது அலறல் சப்தம் கேட்டு அக்கம், பக்கத்தினர் மற்றும் ஊர் பொதுமக்கள் ஓடி வந்து, குழந்தையை தேடும் பணியில் ஈடுபட்டனர். பின்னர் தகவல் அறிந்து வந்த காவல் துறை மற்றும் வனத்துறையுடன் இணைந்து தேடும் பணியில் இரவு முதல் ஈடுபட்டு உள்ளனர். இந்த சம்பவம் அப்பகுதி மக்கள் இடையே பெரும் அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

நேற்று காலை வனத்துறை மற்றும் காவல் துறையினர் மோப்ப நாய்கள் உதவியுடன் தேடும்பணியை தீவிரப்படுத்தி தேடி வந்தனர். இந்நிலையில் சுமார் 300 மீட்டர் தொலைவில் உள்ள யூகலிப்டஸ் அடர்ந்த காடுகள் பகுதிக்கு சிறுமியை கவ்வி கொண்டு சென்ற சிறுத்தை, அங்கு குழந்தையின் உடலை தின்றுள்ளது. பல்வேறு இடங்களில் சிதறிக் கிடந்த சிறுமியின் உடல் பாகங்களை மீட்ட வனத்துறை மற்றும் காவல்துறையினர் பிரேத பரிசோதனைக்காக வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

# ஆபரேஷன் சிந்தூர் இன்னும் முடியவில்லை: ராஜ்நாத்சிங்

**டெல்லி, ஜூன் 22-**
ஆபரேஷன் சிந்தூர் இன்னும் முடிவடையவில்லை என்றும் இந்தியாவுக்கு எதிரான எந்தவொரு பயங்கரவாத நடவடிக்கையும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறினார்.


ஜம்மு - காஷ்மீர் உதம்பூரில் இந்திய ராணுவ வீரர்களுடனான யோகா நிகழ்ச்சியில் பேசிய மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ராணுவ வீரர்கள் உடலையும் மனதையும் கட்டுக்கோப்பாக வைத்திருக்க வேண்டும். அதற்கு நீங்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும். ஒவ்வொரு ராணுவ வீரருக்கும் வலிமை மிக முக்கியம். அத்துடன் உடல்நலனும் முக்கியம். நீங்கள் வலிமையாக இருந்தால் நமது எல்லைகள் வலுவாக இருக்கும். எல்லைகள் வலுவாக இருக்கும்போது, இந்தியா வலுவாக இருக்கும் என்று கூறினார். மேலும் ஆபரேஷன் சிந்தூர் பற்றி பேசுகையில், "இந்திய மண்ணில் ஏற்படும் எந்தவொரு பயங்கரவாதத் தாக்குதலும் பாகிஸ்தானுக்கு பேரழிவை ஏற்படுத்தும். பயங்கரவாதத்திற்கு எதிராக எந்த வகையான நடவடிக்கையையும் எடுக்க இந்தியா தயாராக உள்ளது. ஆபரேஷன் சிந்தூர் இன்னும் முடிவடையவில்லை. இந்த நடவடிக்கையின் மூலம், இந்தியாவுக்கு எதிரான தொடர்ச்சியான பயங்கரவாதத்தை பொறுத்துக்கொள்ள முடியாது என்பதையும் பயங்கரவாதம் செய்தால் விளைவுகள் மோசமாக இருக்கும் என்பதையும் பாகிஸ்தானுக்கு சொல்லி இருக்கிறோம். இந்தியாவிற்கு எதிரான பாகிஸ்தானின் கொள்கை ஒருபோதும் நிறைவேறாது என்று காட்டியிருக்கிறோம்" என்று பேசினார். இந்த நிகழ்வில் ராணுவத் தளபதி உபேந்திர திவேதியும் கலந்துகொண்டார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



மத்திய அரசு யாரையும் வஞ்சிக்கவில்லை. கூட்டணியில் சீட்டு குறித்து பிரச்னை இல்லை. கூட்டணியில் தொடர்வோம் என திருமாவளவன் சொல்கிறார். அப்படி என்றால் ஏதோ பிரச்னை உள்ளது என்பதை காட்டுகிறது. தி.மு.க., இரண்டு சீட்டு கொடுத்தால் விடுதலை சிறுத்தைகள் கட்சி கூட்டணியில் தொடருமா?

**- நயினார் நாகேந்திரன்**



ஆட்சியில் பங்கு என்று சொல்வது பல குழப்பங்களை உருவாக்கும். அது ஒரு நல்ல விஷயம் தான். ஒவ்வொரு இயக்கத்துக்கும் குறைந்த பட்ச செயல் திட்டங்கள் என்பது இருக்கும். அதை நிறைவேற்ற, செயல்படுத்த ஆட்சியில் பங்கு என்பது கட்டாயமாக இருக்க வேண்டும். இந்த தருணத்தில் ஆட்சியில் பங்கு என்து பல குழப்பங்களை தரும்.

**- துரை வைகோ**



யோகா பயிற்சிகள், உடல் ரீதியாக மட்டுமல்லாமல், மன ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் நல்வாழ்வை மேம்படுத்துவதை , உலக நாடுகள் உணர்ந்து வருகின்றன. உலகம் முழுவதும் கடந்த சில ஆண்டுகளில், மக்கள் பலரும் யோகாவை தங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாற்றியுள்ளனர். யோகாசனம் செய்து உடலையும், உள்ளத்தையும் மேம்படுத்துவோம்.

**- அண்ணாமலை**



பிரதமர் மோடி முழக்கங்களை வழங்கும் கலையில் தேர்ச்சி பெற்றுள்ளார். ஆனால், தீர்வுகளை வழங்குவதில் அல்ல. 2014 முதல், உற்பத்தி நமது பொருளாதாரத்தில் 14 சதவீதமாக குறைந்துள்ளது. அரசு இறக்குமதியில்தான் ஆர்வம் காட்டுகிறது. உள்நாட்டு நிறுவனங்கள் பெருகுவதில் அல்ல. இறுக்குமதி அதிகரிப்பால் சீனா லாபம் அடைகிறது.

**- ராகுல் காந்தி**

# கூட்டுறவுத்துறைத்துறை சார்பில் உலக யோகா தின நிகழ்ச்சி இணைப்பதிவாளர் தயாளன் தலைமையில் நடந்தது



ஊட்டி, ஜூன்.22-

நீலகிரி மாவட்ட கூட்டுறவுத்துறைத்துறை சார்பில் ஊட்டியில் உலக யோகா தின நிகழ்ச்சி; இணைப்பதிவாளர் தயாளன் தலைமையில் நடைபெற்றது.

2025 ஆம் ஆண்டு அகில உலக அளவில் கூட்டுறவு ஆண்டாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இன்று 21.06.25 11வது அகில உலக யோகா தினத்தை முன்னிட்டு கூட்டுறவுத் துறையின் சார்பாக அமைச்சர் மற்றும் பதிவாளர்; அறிவுறுத்தலின்படி, நீலகிரி மாவட்டத்தில் மண்டல இணைப்பதிவாளர் இரா. தயாளன் தலைமையில் இந்தியாவின் நல்வாழ்வு, பாரம்பரியம் முழுமையான வளர்ச்சி, சமூக ஒற்றுமை மற்றும் சமூக அதிகாரமளித்தல் என்ற கருப்பொருளில் யோகா சங்கம் எனும் பெயருடன் நீலகிரி மாவட்டம் முழுவதும் அனைத்து கூட்டுறவு சங்கங்களிலும் கூட்டுறவு துறை அலுவலர்கள், கூட்டுறவு சங்க பணியாளர்கள் மற்றும் அருகில் உள்ள உறுப்பினர்களை ஒருங்கிணைத்து யோகா நடைபெற்றது.

நீலகிரி மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பாக ராவ்பகதூர் எச்.பி. ஆரிகவுடர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மண்டல இணைப்பதிவாளர் இராதயாளன் தலைமை ஏற்றார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு சார்பதிவாளர்கள், கூட்டுறவு துறை அலுவலர்கள், கூட்டுறவு சங்க பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# யூத் ஹாஸ்டல்ஸ் சார்பில் நிர்வாகிகள் கூட்டம்




ஈரோடு ஜூன் 22 -

யூத் ஹாஸ்டல்ஸ் அசோசியேசன் ஆப் இந்தியா கொங்கு கிளையின் சார்பில் நிர்வாகிகள் கூட்டம் கிளையின் அலுவலகத்தில் கிளையின் பிரசிடெண்ட் பேராசிரியை சந்திரா தங்கவேல் தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக கலைக்குழு உறுப்பினர் பிரியா சுகுமார் வரவேற்றார் .சேர்மன் மகேந்திரன் முன்னிலை வகித்தார். செயலாளர் டாக்டர் ராஜா சென்ற ஆண்டு நிகழ்வுகளின் தொகுப்பை சமர்ப்பித்தார். சென்ற ஆண்டு இரு முகாம்களில் பங்கு பெற்ற ஈரோடு வேளாளர் மகளிர் கல்லூரி குடிமக்கள் நுகர்வோர் மன்ற துறை மற்றும் ஆங்கிலத் துறைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டன.

மேலும் சென்ற ஆண்டு முகாமில் பங்கு பெற்ற ஈரோடு கலைமகள் கல்வி நிலையம் நாட்டு நலப் பணித்திட்ட துறைக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. சென்ற ஆண்டு நிகழ்வுகளில் நிதி பங்கு அளித்த நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கு சேர்மன் மகேந்திரன் நன்றி தெரிவித்தார். கிளையின் ஹாஸ்டல் வளர்ச்சிக்குழு புதிய உறுப்பினராக மரபபாலம் செந்தில்குமார் தேர்வு செய்யப்பட்டார். கிளையின் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு கூட்டங்கள் கொங்கு கிளை அலுவலகத்திலேயே நடத்திட கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது. சென்ற ஆண்டின் நிகழ்வுகளின் தொகுப்பு மலரை ஏற்பாடு செய்ய இணைச் செயலாளர் ராஜசூரியாவிடம் ஒப்படைக்கப்பட்டது செயலர் டாக்டர் ராஜா நன்றி உரையாற்றினார்.

# குட்கா விற்ற பெட்டி கடைக்காரருக்கு ரூ.25 ஆயிரம் அபராதம்

ஈரோடு, ஜூன். 22–

ஈரோடு மாவட்டத்தில் குட்கா பொருட்கள் விற்பனையை தடுக்கும் வகையில், உணவுப்பாதுகாப்புத்துறை, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி அதிகாரிகள் தீவிரமாக சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில், ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட கருங்கல்பாளையம், பன்னீர்செல்வம் பார்க், காந்திஜி ஆகிய பகுதிகளில், உணவுப்பாதுகாப்புத்துறை அலுவலர் முத்துக்குமார் தலைமையில், மாநகராட்சி சுகாதார ஆய்வாளர்கள் திருநாவுக்கரசு, கதிரேசன், மணிவேல், சதீஸ் ஆகியோர் சோதனையில் ஈடுபட்டனர்.

இதில், மளிகை கடை, பெட்டிக்கடை என 19 கடைகளில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. சோதனையில், கருங்கல்பாளையத்தைச் சேர்ந்த ஜெயமணி என்பவருக்கு சொந்தமான கடையில் 1.20 கிலோ குட்கா பொருட்கள் இருப்பது கண்டறியப்பட்டது. தனைத்தொடர்ந்து, குட்கா பொருட்களை பறிமுதல் செய்த அதிகாரிகள், பெட்டிக் கடையை இழுத்து மூடி, ரூ.25 ஆயிரத்தை அபராதமாக விதித்தனர்.

# ஈரோட்டில் உலக சமுதாய சேவா சங்கம் சார்பில் யோகா தினம்



ஈரோடு ஜூலை 22

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21-ம் தேதி சர்வதேச யோகா தினமாக உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. வேதாத்திரி மகரிஷியால் 1958-ம் ஆண்டு நிறுவப்பட்ட உலக சமுதாய சேவா சங்கம் ஈரோடு மண்டலம் மற்றும் வேளாளர் கல்லூரி சார்பில் இந்த ஆண்டு ஜூன் 21 சனிக்கிழமை சர்வதேச யோகா தினம் வேளாளர் கல்லூரி கஸ்தூரிபா கலையரங்கில் நேற்று நடைபெற்றது. காலை 7.00 மணி முதல் 8.10 மணி வரை நடைபெற்றது நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கோ. சுப்பாராவ் தலைமையுரை ஆற்றினார். உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் பத்மஸ்ரீ எஸ்கேஎம்.மயிலானந்தன் முன்னிலை உரை ஆற்றினார். யோகாசனங்களை வேளாளர் மகளிர் கல்லூரியின் 200 மாணவர்கள் செய்து காண்பிக்கும் நிகழ்வு நடைபெற்றது. ஜாதி, மதம், மொழி கடந்த சேவை அமைப்பான உலக சமுதாய சேவா சங்கம் நடத்தும் நிகழ்ச்சியாகும் . மனிதகுலம் முழுமையான நல வாழ்வு பெற்று ஆரோக்கியத்தோடும், அமைதியோடும் வாழ வேண்டும் என்ற நோக்கத்தில் மனவளக்கலை யோகாவை கற்றுக் கொடுத்து வரும் உலக சமுதாய சேவா சங்கத்தின் யோகா தின நிகழ்ச்சியில் மாணவியர்கள், மன்ற அன்பர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட 600 பேர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு பப்ளிக் பள்ளியில் யோகா தின விழா



ஈரோடு ஜூன் 22 -

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு ஈரோடு பப்ளிக் ஸ்கூல் (சிபிஎஸ்இ ) அரங்கில் ஜெயின் சர்வதேச வர்த்தக அமைப்பு சார்பில் நேற்று சர்வதேச யோகா தினம் கடைபிடிக்கப்பட்டது

விழாவுக்கு ஜிட்டோ அமைப்பின் தலைவர் ஸ்ரீ கௌதம் போத்ரா தலைமை தாங்கினார் ஜிட்டோ அமைப்பின் தலைமைச் செயலாளர் ஆர் விபுல் ஜெயின் முன்னிலை வகித்தார் பள்ளியின் தாளாளர் அனிதா அருள் கணேஷ் பொருளாளர் அருள் கணேஷ் ஆகியோர் வரவேற்றனர். இதில் ஈரோடு மாநகராட்சி இரண்டாம் மண்டல தலைவர் காட்டு சுப்பு (எ) சுப்பிரமணி திமுக மகளிர் அணி நிர்வாகி வீரமணி ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர் இந்த யோகாசன நிகழ்ச்சியில் 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்று பல்வேறு யோகாசனங்களை செய்து காட்டினார் நிகழ்ச்சியில் பாசம் அறக்கட்டளை நிர்வாகி வாசுதேவன் உட்பட பலர் பங்கேற்றனர்

# ஊட்டி ஜெ.எஸ்.எஸ். பார்மசி கல்லூரியில் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித்துறை சார்பில் சர்வதேச யோகா தின கொண்டாட்டம்



ஊட்டி, ஜூன்.22-

நீலகிரி மாவட்ட இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித்துறை சார்பில் ஊட்டி ஜெ.எஸ்.எஸ். பார்மசி கல்லூரியில் 11-வது சர்வதேச யோகா தினம் நேற்று கொண்டாடப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் ஜூன்; 21-ந் தேதி சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படுகிறது. உடல் மற்றும் மனம் இரண்டுமே ஒருங்கிணைந்து, செயல்பட, உடல் ஆரோக்கியமாக இருக்க, நோய்களைத் தடுக்க, மூப்பைத் தடுக்க, என்று பல விதங்களில் யோகாசனம் உதவுகிறது. இந்த நிலையில் நேற்று நீலகிரி மாவட்டத்தில் பள்ளிகள், அரசு அலுவலகங்கள் உள்பட பல இடங்களில் யோகா தினம் கொண்டாடப்பட்டது.

இந்த நிலையில் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித்துறை சார்பில் ஊட்டியிலுள்ள ஜெ.எஸ்.எஸ்.மருந்தாக்கியல் கல்லூரியில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ். நிஷா தலைமை தாங்கி துவக்கி வைத்து பேசினார். மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் பாலசுப்பிரமணியன் வரவேற்று பேசினார். விழாவில் யோகா மருத்துவர்கள் டாக்டர். சரவணன், டாக்டர். அனிதா, டாக்டர். அமிர்தவர்சினி ஆகியோர் தலைமையிலான குழுவினர் மாணவ, மாணவிகளுக்கு யோகா செய்வது குறித்து பயிற்சி அளித்தனர். இதில் சிகிச்சை உதவியாளர்கள் அரசமணி, அஜின்குமார், பிரிஸ்கில்லால் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர். இதற்கு தேவையான ஏற்பாடுகளை மாவட்ட சித்த மருத்துவம் மற்றும் ஹோமியோபதித்துறையினர் சிறப்பாக செய்திருந்தார்.இதுகுறித்து ஆசிரியர்கள் கூறுகையில், யோகா உடலுக்கு மட்டுமல்ல மனதுக்கும் நன்மை அளிக்கும். அனைத்து வயதுப் பிரிவினரும் யோகா கற்றுக் கொள்ளலாம் என்றனர்.

# ஈரோடு டிவைன் நர்சரி பள்ளியில் சர்வதேச யோகா தினம்



ஈரோடு ஜூன் 22 -

ஈரோடு கருங்கல்பாளையத்தில் உள்ள டிவைன் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளியில் நேற்று காலை 11-வது சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு பரஞ்ஜோதி யோக கல்லூரியின் அறங்காவலர் மற்றும் இயக்குனர், பல்லவா குரூப்ஸ் பள்ளிபாளையம், வி எஸ் பழனிச்சாமி தலைமை தாங்கினார் ஜி.ஜெயலட்சுமி வரவேற்றார்

மெய் ஞானாசிரியர் பெருமக்களும், பரஞ்ஜோதி யோகா கல்லூரியின் அறங்காவலர்களும், யோகா வகுப்பு மெய் அன்பர்களும், டிவைன் பள்ளி ஆசிரியர்களும், பெற்றோர்களும், அலுவலக அன்பர்களும் கலந்து கொண்டு யோகா பயிற்சி செய்தனர் யோகா தினத்தின் வழிமுறைகளை பின்பற்றி யோகா வகுப்பினை மெய்ஞானாசிரியர்கள் மற்றும் மெய்ஞானசிரியரும் மேலாளாரும் எஸ். சுப்பிரமணியன் ஆகியோர் நடத்தினார்கள்.

இந்த விழாவினை டிவைன் பள்ளி மற்றும் உலக சமாதான அறக்கட்டளை இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர். நிறைவாக . பள்ளியின் முதல்வர் கே தேவகி நன்றி கூறினார்

# ஈரோடு கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தில் முழு நேர பட்டயப்பயிற்சியில் சேர கால நீட்டிப்பு

## மண்டல இணைப்பதிவாளர் தகவல்

ஈரோடு ஜூன் 22 -

ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு - சத்தியமங்கலம் மெயின் ரோட்டில் கொங்கம்பாளையம் பிரிவு, கதவு எண். 5 யுவராஜ் பள்ளி கட்டிட வளாகம், வாய்க்கால்மேடு, S.V.N பள்ளி பின்புறம், ஈரோடு-638 102 என்ற முகவரியில் செயல்படும் ஈரோடு கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தில் 2025-26 ஆம் ஆண்டிற்கான முழுநேர கூட்டுறவு மேலாண்மை பட்டய பயிற்சிக்கான மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் இணையதள முகவரியான www.tncu.tn.gov.in மூலம் மட்டுமே 15.05.2025 முதல் பெறப்படுகிறது. விண்ணப்ப கட்டணம் ரூ.100/-ஐ இணையவழியில் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 20.06.2025 என்று அறிவித்திருந்த நிலையில், விண்ணப்பிக்க தவறியவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் தற்போது 20.07.2025 அன்று பிற்பகல் 05.00 மணி வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பயிற்சியில் சேருவதற்கு 0107.2025 அன்று குறைந்தபட்சம் 17 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். அதிகபட்ச வயது வரம்பு இல்லை. மாணவர் சேர்க்கைக்கான குறைந்தபட்ச கல்வி தகுதி பன்னிரெண்டாம் வகுப்பு (+2) தேர்ச்சி அல்லது S.S.I.C தேர்ச்சியுடன் 3 வருட பட்டயப்படிப்பு (Diploma) தேர்ச்சி (10+3) பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். மேற்கூறிய பயிற்சிக்கான காலம் ஓராண்டுகள் (2 பருவ முறைகள்) மற்றும் கட்டணம் ரூபாய் 20,850/- ஆகும். இதர தகவல்களை அறிந்து கொள்ள www.incu.tn.kay.in என்ற இணையதளத்திலும், கூடுதல் விவரங்களுக்கு, ஈரோடு கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலைய தொலைபேசி எண் 0424-2998632 மற்றும் அலைபேசி எண். 94892 40485 வாயிலாக தொடர்பு கொள்ளலாம். எனவே கூட்டுறவு பயிற்சி பெற விருப்பமுள்ளவர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்தகவலை ஈரோடு மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர்ப .கந்தராஜா தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.



நீலகிரி மாவட்ட அ.தி.மு.க., குன்னூர் கிழக்கு ஒன்றியத்தில் உள்ள 25 பூத்துகளுக்கும் குழு புகைப்படம் எடுக்கும் பணியினை முடித்து ஒப்படைத்த ஒன்றிய செயலாளர் கே.பி. ஹேம்சந்திற்கு மாவட்ட செயலாளர் கப்பச்சி டி.வினோத் பாராட்டு தெரிவித்தார். உடன் இலக்கிய அணி மாவட்ட செயலாளர் சீனிவாசன், தகவல் தொழில் மண்டல இணைச் செயலாளர் சதீஷ் போஜன, கலை பிரிவு மாவட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, தகவல் தொழில் பிரிவு மாவட்ட துணைச் செயலாளர் ரங்கநாதன் இளைஞரணி மாவட்ட தலைவர் விஸ்வநாதன் ஆகியோர் உடன் இருந்தனர்

# மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனங்களுக்கு ரொக்கத்துடன் தங்கப்பதக்கம் பரிசு

## விண்ணப்பிக்க வரும் 30-ந் தேதி கடைசி நாள்

ஊட்டி, ஜூன்.22-

மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனங்களுக்கு ரொக்கப்பரிசுடன் தங்கப்பதக்கமும் வழங்கப்படஉள்ளதால், இதற்கு விண்ணப்பிக்க வரும் 30-ந் தேதி கடைசி நாள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மாநில அளவில், சிறப்பாக பணிபுரிந்தவர்கள் மற்றும் நிறுவனங்களைத் தேர்வுக் குழு மூலம் தேர்வு செய்து, தேர்வு செய்யப்படும் விருதாளர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர்;, மாநில விருதி வழங்கி ஊக்குவித்து கௌரவிக்கப்படுவதால், தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாற்றுத்திறனாளிகளுக்கான தொண்டு நிறுவனங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக பணி புரிபவர்கள், மேலும் சிறப்பாக பணிபுரிய வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தும் பொருட்டு, கீழ்காணும் விருதுகள் 15 ஆகஸ்டு 2025 சுதந்திர தினவிழா அன்று வழங்கப்படவுள்ளன.

விருதின் விவரங்கள் பின் வருமாறு :- மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனங்களுக்கு, 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் ரூ.50,000- ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ்களும், மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த மருத்துவர்களுக்கு, 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ்களும், மாற்றுத்திறனாளிகளுக்கு மிக அதிக அளவில் வேலை வாய்ப்பு அளித்த தனியார் நிறுவனங்களுக்கு, 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்களும், மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த சமூகப் பணியாளார்களுக்கு, 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்களும், மாற்றுத்திறனாளிகளுக்கு அதிக அளவில் கடன் வழங்கிய சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு, 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்படுகிறது.

மேற்காணும் விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் விருதாளர்கள் வலைத்தளத்தில், குறிப்பிட்டுள்ள படிவத்தில் விவரங்களை பதிவு செய்தும், கோரபப்பட்;ட விவரங்களை இணைத்தும் வரும் 30.06.2025-க்குள் விண்ணப்பிக்கலாம். வலைத்தளத்தில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இவ்வாறு நீலகிரி கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

# அகில உலக கூட்டுறவு ஆண்டு: எப்பநாடு தொழிற்கூட்டுறவு தொழிற்சாலையில் மரக்கன்றுகள் நடும் விழா



ஊட்டி, ஜூன்.22-

ஐக்கிய நாடுகள் சபையானது நடப்பு ஆண்டான 2025னை அகில உலக கூட்டுறவு ஆண்டாக அறிவித்துள்ளது. இதனை தொடர்ந்து உலகம் முழுவதும் கூட்டுறவு இயக்கங்கள் வாயிலாக பல்வேறு சமூக செயல்பாடுகள் நடைபெற்று வருகிறது. கூட்டுறவுத்துறை அமைச்சர் மற்றும் பதிவாளரின்; ஆணையின்படி தமிழ்நாடு முழுவதும் சுமார் பத்து இலட்சம் மரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டு நீலகிரி மாவட்டத்தில் சுமார் பன்னிரெண்டாயிரம் மரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டுள்ளது, இதன் ஒரு பகுதியாக நீலகிரி மாவட்டத்தில் எப்பநாடு பகுதியில் அமைந்துள்ள எப்பநாடு தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை வளாகத்தில் நீலகிரி மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பாக மண்டல இணைப்பதிவாளர் திரு. இரா. தயாளன் தலைமையில் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மேலாண்மை இயக்குநர் சி. அய்யனார், பொது வி நி யோ க த் தி ட்ட துணைப்பதிவாளர் செ. கமல் சேட், எப்பநாடு இண்ட்கோ தொழிற்சாலை செயலாட்சியர் பாலாஜி, கூட்டுறவு சங்கங்க பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# கோயம்பேடு மார்க்கெட்டில் சுற்றித்திரிந்த மாடுகளை பிடித்து 60 ஆயிரம் அபராதம் விதிப்பு

சென்னை ஜூன் 22-

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுகளில் ஏராளமான மாடுகள் உலாவருவதால் வியாபாரிகள், பொதுமக்கள் கடும் அச்சம் அடைந்தனர். திடீரென வேகமாக மாடுகள் ஓடும் போது பொதுமக்கள் மீது மோதி காயம் அடைந்து வந்தனர். இதனால் அச்சுறுத்தலாக உள்ள மாடுகளை பிடிக்கவேண்டும் என்று பல தரப்பில் இருந்தும் கோரிக்கை எழுந்தது. இதுகுறித்து சென்னை மாநகராட்சி அதிகாரிகளிடம் வியாபாரிகள் புகார் கொடுத்து மார்க்கெட்டில் சுற்றிவரும் மாடுகளை பிடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். அத்துடன் அங்காடி நிர்வாக முதன்மை அலுவலர் இந்துமதியை சந்தித்து புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.இதையடுத்து அங்காடி நிர்வாக முதன்மை அலுவலர் இந்துமதி நேற்று மார்க்கெட்டில் ஆய்வு செய்த போது பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் சுற்றித்திரிந்த மாடுகளை பிடிக்க உத்தரவிட்டார். இதையடுத்து அங்காடி நிர்வாக ஊழியர்கள் 26 பேர் சென்று மார்க்கெட்டில் சுற்றித்திரிந்த மாடுகளை பிடித்து மாட்டின் உரிமையாளர்களை வரவைத்து பேசினர். பின்னர் அவர்களிடம் பேசி எச்சரிக்கை விடுத்ததுடன் 60 ஆயிரம் அபராதம் விதித்து மாடுகளை உரிமையாளரிடம் ஒப்படைத்தனர். ''மாடுகள் மார்க்கெட் வளாகத்திற்குள் வராதபடி வீட்டில் கட்டிப்போட்டு பராமரிக்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டனர்.

# காஞ்சிபுரத்தில் சர்வதேச யோகா தினக் கொண்டாட்டம்: மீனாட்சி மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பங்கேற்பு



**காஞ்சிபுரம், ஜூன் 22 -** காஞ்சிபுரம்மீனாட்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது.

காஞ்சிபுரம் அடுத் ஏனாத்தூரில் மீனாட்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனமும் மதர் பல்கலைக் கழகத்தின் யோகா அறிவியல் மற்றும் மருத்துவத் துறையும், மொரார்ஜி தேசாய் தேசிய யோகா நிறுவனத்துடன் இணைந்து, "யோகா சங்கம்" என்ற நிகழ்வை இங்குள்ள விளையாட்டு திடலில் நடத்தியது.

மீனாட்சி மருத்துவக் கல்லூரி, கூட்டணி சுகாதார அறிவியல் மற்றும் அருள்மிகு மீனாட்சி செவிலியர் கல்லூரியைச் சேர்ந்த 750 மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.மீனாட்சி மருத்துவக் கல்லூரியின் துணை முதல்வர் ஈஸ்வரி வரவேற்றார். தொடர்ந்து, மதர் பல்கலைக்கழக யோகா அறிவியல் மற்றும் மருத்துவத் துறை முதல்வர் சுப்புலட்சுமி, சிறப்பு யோகா குறித்த விவரங்கள் அடங்கிய கையேட்டை அனைவருக்கும் வழங்கினார். யோகா நெறிமுறை அமர்வை அனைவரும் நேரடியாக செய்து காண்பித்தனர்.

நிகழ்ச்சியில் உடற்கூறியியல் துறை இணைப் பேராசிரியர் சரவணகுமார், மீனாட்சி மருத்துவக் கல்லூரி முதல்வர் ராஜசேகர், மருத்துவ கண்காணிப்பாளர் பூபதி, கூட்டணி சுகாதார அறிவியல் முதல்வர் ராம்நாத், அருள்மிகு மீனாட்சி செவிலியர் கல்லூரி முதல்வர் விக்டர் ஆகியோர் இதற்கான ஏற்பாடு செய்திருந்தனர்.

# சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்: அமைச்சர் இரா.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது





**சென்னை,ஜூன்.22** முதலமைச்சர் ஆணைக்கினங்க சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர்.இரா. இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது .

இக்கூட்டத்தில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலயங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தலைவர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் டாக்டர்.க.மணிவாசன் சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தற்போது நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் பிரிவுகள், கட்டமைப்பு வசதிகள், செயல்பாடுகள் குறித்தும் ஏற்கனவே நடைபெற்ற வளர்ச்சி பணிகள் குறித்தும் தற்போது நடைபெற வேண்டிய வளர்ச்சி பணிகளை விரைவுப்படுத்துவது குறித்தும் மாவட்ட சுற்றுலா அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்,

இதனை தொடர்ந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நடத்தப்படும் ஓட்டல்களில் தரமான உணவு வழங்குதல், விருந்தோம்பல் மற்றும் ஓட்டல் வளாகங்களை தூய்மையாக பராமரித்தல் உட்பட உயர் தரமான சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்க வேண்டுமென்று ஓட்டல் மண்டல மேலாளர்கள் மற்றும் மேலாளர்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் அறிவுறுத்தினார்கள்.

2025-2026 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகளை விரைந்து நிறைவேற்ற அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சுற்றுலாத் தலங்களில் அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் புதிய சுற்றுலா தலங்களை கண்டறிந்து அவ்விடங்களில் உலக தரத்திலான அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், சுற்றுலா வளர்ச்சித் திட்டப் பணிகளை சிறப்பான முறையில் விரைவாக மேற்கொள்ள சுற்றுலாத்துறை அமைச்சர் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் மற்றும் மாவட்ட சுற்றுலா அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல் மண்டல மேலாளர்கள் மற்றும் மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

குடிபோதையில் வாகனத்தை ஓட்டாதே!
குடும்பத்தை சோகத்தில் ஆழ்த்தாதே!!

# எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச யோகா தினம் கோலாகல கொண்டாட்டம்



**சென்னை, ஜூன்-22** தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழகம் சார்பில்,11வது சர்வதேச யோகா தினம், நேற்று காலை 6 மணிக்கு பல்கலைக் கழக வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.'யோகா சங்கமம்' என பெயரிடப்பட்ட இந்த நிகழ்வில் 300க்கும் மேற்பட்டபல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள், பணியாளர்கள் ஆகியோர்ஆர்வமுடன் பங்கேற்றனர்.

இந்த நிகழ்விற்கு பல்கலைக்கழக துணைவேந்தர்.நாராயணசாமி தலைமை வகித்தார். பதிவாளர்.சிவசங்கீதா உட்பட பேராசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழகபணியாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.இந்த ஆண்டுக்கான யோகா தினத்தின் கருப்பொருள் ஒன்றே பூமி,ஒன்றே ஆரோக்கியம் என மத்தியஆயுஷ் அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்தக் கருப்பொருள், மனிதர்களின்உடல் நலனும், சுற்றுச்சூழலின் நலனும் ஒன்றோடொன்று இணைந்தவை என்பதை வலியுறுத்துகிறது. யோகாவின் பலன்களை உலகளாவிய அளவில்மக்களிடம் கொண்டு செல்லும் நோக்குடன், இந்த சர்வதேச யோகா தினம்கொண்டாடப்படுகிறது.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழகத்தில்மாணவர்களும் பேராசிரியர்களும் சேர்ந்து யோகாசனங்களை அழகாக செய்தனர். நின்று செய்யும், அமர்ந்து செய்யும், படுத்த நிலையில் செய்யும்யோகாசனங்கள், பிராணாயாமம், தியானம் போன்றவை நேர்த்தியானமுறையில் செய்யப்பட்டது. துணைவேந்தர் . நாராயணசாமி தனதுதலைமை உரையில், நவீன வாழ்க்கை முறையில் யோகாவின்முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். யோகா என்பது மனஅழுத்தம், உடல் \நலம் குறைபாடுகள் போன்றவற்றைத் தடுக்கும் மற்றும் குணப்படுத்தும் சக்தி\வாய்ந்த வழிமுறை என அவர் கூறினார். யோகா ஒவ்வொருவராலும் தினசரிபயிற்சி செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.அதன்பின் மாணவர்களுக்கான யோகா போட்டி நடைபெற்றது. இதில்மாணவர்கள் தங்கள் திறமைகளைத் துல்லியமாக வெளிப்படுத்தினர்.

போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள்துணைவேந்தர் வழங்கினார்.தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தில்நடைபெற்ற 11வது சர்வதேச யோகா தினம் யோகா என்பது ஒருஉடற்பயிற்சி மட்டுமல்ல, உடல் ஆரோக்கியமும், மன அமைதியும் தரும்நெறிமுறை என்பதை மீண்டும் ஒருமுறை நினைவூட்டியது.சித்த மருத்துவத் துறையின் தலைவர் மரு. என்.கபிலன் மற்றும்பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர். சாந்தி ஆகியோர் இந்தநிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர்.

# தரமணி பகுதியில் வாலிபரை மிரட்டி செல்போன் பறிக்க முயன்ற 3 பேர் கைது

**சென்னை ஜூன் 22-** சென்னை, பெருங்குடி, சிபிஐ காலனியில் வசித்து வரும் ஆதித்யா, என்பவர் கடந்த 15.ந் தேதி அன்று அதிகாலை அவரது நண்பர்களை பார்த்து விட்டு, காரில் ஓ.எம்.ஆர். சாலை தனியார் கல்லூரி அருகே வந்த போது, காரில் உள்ள பம்பர் கீழே உரசியதால், காரிலிருந்து கீழே இறங்கி பார்த்துள்ளார். அப்போது அங்கு 2 இருசக்கர வாகனங்களில் வந்த 6 பேர் மேற்படி ஆதித்யாவை மிரட்டி செல்போன் மற்றும் கார் சாவியை கேட்டு உள்ளனர். ஆதித்யாவின் சத்தம் கேட்டு அருகிலிருந்த பொதுமக்கள் சம்பவயிடத்திற்கு வந்ததால் எதிரிகள் 6 நபர்களும் அங்கிருந்து தப்பிச்சென்றனர். இது குறித்து ஆதித்யா தரமணி காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

தரமணி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.முகேஷ், 2.சங்கர், 3.ஶ்ரீகாந்த், ஆகிய மூவரை கைது செய்தனர். மேலும் மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 3 இளஞ்சிறார்களிடம் போலீசார் விசாரணை செய்தனர். அவர்களிடமிருந்து 2 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

# கோவையில் சூயஸ் நிறுவன ஊழியர்களுக்கு பாம்புகள் குறித்த விழிப்புணர்வு; பாம்பு கடிக்கான முதல் உதவி பயிற்சி பட்டறை

**கோவை, ஜூன் 22-** சமூகப் பொறுப்பு மற்றும் மக்களுக்கான பாதுகாப்பின் ஒரு பகுதியாக கோவை நகர மக்களுக்கு 24 மணி நேரமும் சிறப்பான குடிநீர் வினியோகத்தில் ஈடுபட்டு வரும் சூயஸ் நிறுவனம் பாம்புகளின் தன்மைகள் குறித்தும் பாம்பு கடிக்கான முதல் உதவி சிகிச்சை குறித்தும். தங்கள் ஊழியர்களுக்கு பயிற்சி பட்டறையை நடத்தியது. இதில் அனைத்து ஊழியர்களும் கலந்து கொண்டனர். கோவையில் உள்ள சூயஸ் அலுவலகத்தில் பர்ஸ்ட் ஹார்ட் பவுண்டேஷன் நெட்வொர்க் அமைப்புடன் இணைந்து பாம்புகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் முதலுதவி சிகிச்சைக்கான பயிற்சி பட்டறை நடைபெற்றது. இதில், கட்டுமான பகுதிகள் மற்றும் குடிநீர் திட்டப் பணிகள் நடைபெறும் இடங்களில் பாம்புகளை பார்த்தால் அவற்றிடம் எப்படி பாதுகாப்பாக நடந்து கொள்வது மற்றும் அவை கடித்தால் முதலுதவி அளிப்பது எப்படி என்பது குறித்து ஊழியர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. இன்றுவரை, கட்டுமானப் பகுதிகளிலிருந்து சுமார் 50 பாம்புகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு, நன்கு பயிற்சி பெற்ற பணியாளர்களால் வனத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த பயிற்சி பட்டறை பர்ஸ்ட் ஹார்ட் பவுண்டேஷன் நெட்வொர்க் அமைப்பின் தலைவர் சாந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் அவர் பாம்புகளின் நடவடிக்கைகள், பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் அவசரகால முதல் உதவி சிகிச்சை முறைகள் குறித்து அனைவரிடமும் பகிர்ந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் கோவை சூயஸ் நிறுவனத்தின் 24x7 குடிநீர் வினியோக திட்ட இயக்குனர் சங்கிராம் பட்டநாயக் மற்றும் இணை இயக்குனர் பங்கஜ் குமார் உள்ளிட்ட ஏராளமான பேர் கலந்து கொண்டனர். எங்களின் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்களில் பாதுகாப்பான பணிச்சூழலை உறுதி செய்வதற்கான இத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதாக பட்டநாயக் தெரிவித்தார். இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் பாம்புகளின் தன்மைகள் குறித்தும், அவை கடித்தால் அளிக்கப்பட வேண்டிய முதல் உதவி சிகிச்சை குறித்தும் தெரிந்து கொண்டதாக கூறினார்கள்.

# கோயம்பேடு பகுதியில் ஓட்டல் ஊழியரை தாக்கியவர் கைது

**சென்னை ஜூன் 22** தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு பகுதியைச் சேர்ந்த காளிதாஸ், அம்பத்தூரில் உள்ள ஹோட்டலில் தங்கி வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 19.ந் தேதி அன்று இரவு கோயம்பேடு பேருந்து நிறுத்தம், 5-வது நுழைவுவாயில், மெயின் ஹால் அருகே படுத்து உறங்கிக் கொண்டு இருந்த போது, அவருக்கு தெரிந்த தினகரன்(எ)கார்த்திக் என்ற நபர் மது போதையில் அங்கு வந்து காளிதாஸிடமிருந்த செல்போனை பறிக்க முயன்ற போது, எதிரியை தடுத்துள்ளார். இதனால் கோபமடைந்த எதிரி காளிதாஸை தகாத வார்த்தைகளால் பேசி, உடைந்த பீர் பாட்டிலால் தாக்கிய போது, வலி தாங்க முடியாமல் அவர் சத்தம் போடவே, அருகே இருந்த பொது மக்கள் சத்தம் கேட்டு எதிரியை பிடிக்க முயன்ற போது கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து தப்பிச் சென்று விட்டார். மேற்படி சம்பவத்தில் இரத்த காயமடைந்த காளிதாஸ் பொதுமக்கள் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலமாக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில், மேற்படி சம்பவம் குறித்து காளிதாஸ் கொடுத்த புகாரின்பேரில், கோயம்பேடு சிஎம்பிடி காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, போலீசார் விசாரணை மேற்கொண்டனர். கோயம்பேடு சிஎம்பிடி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி தினகரன்(எ)கார்த்திக், என்பவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரி தினகரன்(எ) கார்த்திக் விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# எடப்பாடியின் 71-வது பிறந்த நாளையொட்டி வடசென்னையில் 2 நாட்கள் கிரிக்கெட் போட்டி



**சென்னை,ஜூன்.22-** அ.தி.மு.க. பொதுச்செயலாளர், எடப்பாடி பழனிசாமியின் 71 வது பிறந்த நாளையொட்டி வடசென்னையில் இரண்டு நாள் கிரிக்கெட் போட்டி நடை பெறுகிறது, . வடசென்னையில் தண்டையார்பேட்டை சுந்தரம்பிள்ளை நகரில் உள்ள உள் விளையாட்டு அரங்கில் இந்த கிரிக்கெட் போட்டியை அதிமுக வடகிழக்கு மாவட்ட செயலாளர் ஆர்.எஸ். ராஜேஷ் துவக்கி வைத்தார்,

இன்று மாலை வரை இரவு பகலாக தொடர்ந்து நடைபெறும் இந்த கிரிக்கெட் போட்டியில் ராயல் எலிவென்ஸ், ராயல் சேலஞ்சர்ஸ், ஏஜிசிசி, டக்கவுட், ட்ராகன்பாய்ஸ், டீம்செவன், சென்னை புயல், எஸ்விஎன்.பாய்ஸ், உள்ளிட்ட பெயர்கள் கொண்ட 120-அணிகள் பங்கேற்றுள்ளன,.

இதில் வெற்றி பெறும் அணிக்கு முதல் பரிசாக ரூ.50-ஆயிரம், இரண்டாம் பரிசாக ரூ.25-ஆயிரம், மூன்றாம் பரிசாக ரூ.10-ஆயிரம், என பரிசு தொகைகள் அறிவிக்கப்பட்டுள்ளது போட்டியில் பங்கேற்கும் வீரர்களுக்கு எடப்பாடி பழனிசாமியின் உருவம் பதித்த பனியன் மற்றும் உணவு, குடிநீர், உள்ளிட்ட தேவையான உதவிகள், மற்றும் பொதுமக்கள் பார்க்கும் வகையில் எல்இடி டிஸ்பிளே மூலம் காட்சி படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.இந்நிகழ்வில் அதிமுக வழக்கறிஞர் அணி மாநில துணைசெயலாளர் மதுரை வீரன், எம்ஜிஆர் மன்ற இணைச்செயலாளர் நேதாஜி கணேசன், மற்றும் சேவியர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்

# ஓட்டல் ஊழியரிடம் செல்போனை திருடிய 2 பேர் கைது

**சென்னை ஜூன் 22-** பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த வேலு, என்பவர் சென்னை, சென்டிரல் இரயில் நிலையம் அருகிலுள்ள ஒரு ஓட்டலில் வேலை செய்து வருவதாகவும், வேலு கடந்த 18.ந் தேதி அன்று இரவு, மேற்படி ஓட்டலின் வெளியே செல்போனில் பேசியபடி நின்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த 2 பேர் வேலுவை கையால் தாக்கி அவரது செல்போனை பறித்துக் கொண்டு இருவரும் தப்பிச் சென்றனர். இது குறித்து வேலு, பூக்கடை காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். பூக்கடை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி செல்போன் திருட்டு வழக்கில் தொடர்புடைய 1.பரத், 2.அஜய்குமார், ஆகிய 2 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து புகார்தாரரின் செல்போன் மீட்கப்பட்டது

Printed, Published and
Owned by S.Manimaran
and Printed at
Manimaran Printers
C3, Private industrial Estate,
sidco industrial Estate,sidco po
Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# சென்னை பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கந்தல் சேகரிப்பாளர்களுக்கான புதுவாழ்வு சிறப்பு முகாம்: மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

**சென்னை,ஜூன்.22** சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கந்தல் சேகரிப்பாளர்களுக்கான புது வாழ்வு சிறப்பு முகாமினை மேயர் ஆர். பிரியா (21.06.2025) தொடங்கி வைத்து, அரசுத் துறைகளால் மேற்கொள்ளப்படும் சிறப்பு நடவடிக்கைகளைப் பார்வையிட்டார்.

பின்னர், மேயர் பயனாளிகளுக்கு மருத்துவக் காப்பீடு அட்டை, தாட்கோ அடையாள அட்டைகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்து தூய்மைப் பணியாளர்களுக்கும் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் சார்பில் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளைப் பெறும் வகையில் இவ்வாரியத்தினுடைய அடையாள அட்டை வழங்கும் பணிகள் சென்னை மாநகராட்சியால் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது .

### நலத்திட்ட உதவி

மேலும் குப்பை கொட்டும் வளாகங்களில் கந்தல் சேகரிப்பாளர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் அனைத்தும் கிடைத்திடும் வகையில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

முதற்கட்டமாக, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கந்தல் சேகரிப்பாளர்களுக்காக கடந்த 26.04.2024 அன்று சிறப்பு முகாம் நடத்தப்பட்டு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கந்தல் சேகரிப்பாளர்களுக்கான புது வாழ்வு சிறப்பு முகாம் நடைபெற்றது. இதனை மேயர் அவர்கள் தொடங்கி வைத்து அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கான சிறப்பு நடவடிக்கைகளைப் பார்வையிட்டார். இதனைத் தொடர்ந்து 200 கந்தல் சேகரிப்பாளர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு மேயர் வழங்கினார்.

மண்டலம்-9 முதல் மண்டலம்-15 வரை நாள்தோறும் சேகரிக்கப்படும் குப்பைகள் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் சேகரிக்கப்படுகிறது. இந்தக் குப்பைகளை அகற்றும் பணியில் கந்தல் சேகரிப்பாளர்கள் ஈடுபடுகின்றனர்.

### குப்பை சேகரிப்பு

சென்னை மாநகராட்சியின் சார்பில் பெருங்குடியில் அமைந்துள்ள குப்பை கிடங்கில் குப்பைகளை சேகரிக்கும் கந்தல் சேகரிப்பாளர்கள் கணக்கெடுக்கப்பட்டதில், சுமார் 162 குடும்பங்கள் மற்றும் 284 தனிநபர்கள் உள்ளனர். இவர்களுக்கு தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள் சென்றடையும் பொருட்டும், புதிய வாழ்வாதாரத்திற்கான கூட்டு முயற்சியில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், சோழிங்கநல்லூர், வட்டாட்சியர் அலுவலக வருவாய்த்துறை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, பெருநகர சென்னை மாநகராட்சியின் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் பதிவு, சமூக நலத்துறை DSWO வடக்கு மற்றும் தெற்கு, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சார்பில் இ- சேவை மையம், தொழிலாளர் நல வாரியம், ஆதார் ஆட்டை ஆகிய சம்பந்தப்பட்ட துறைகளின் சேவைகளை வழங்கிடும் வகையில், கந்தல் சேகரிப்பாளர்களுக்கான முதற்கட்ட சிறப்பு முகாமானது 19.05.2025 அன்று நடத்தப்பட்டு, 139 நபர்கள் பயனடைந்தனர். இவர்களுக்கு தூய்மைப் பணியாளர்களுக்கான காப்பீடு அட்டை பெற பதிவு செய்யப்பட்டுள்ளது.இரண்டாவது கட்டமாக இந்தச் சிறப்பு முகாமானது, 19.06.2025 அன்று நடத்தப்பட்டு, 165 நபர்கள் பயனடைந்துள்ளனர். இதில் முதலமைச்சர் மருத்துவக் காப்பீட்டு திட்டத்திற்கு 111 நபர்களும், இதர துறைகளின் சேவைகளுக்காக 54 நபர்களும் பதிவு செய்துள்ளனர்.

மேலும், (21.06.2025) நடத்தப்பட்ட கந்தல் சேகரிப்பாளர்களுக்கான புதுவாழ்வு சிறப்பு முகாமில் அனைத்து கந்தல் சேகரிப்பாளர்களுக்கும் மருத்துவப் பரிசோதனை மற்றும் சிறப்பு மருத்துவ முகாம், தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் ரூ.5 இலட்சம் மதிப்புள்ள அனைத்து பாதுகாப்பு உபகரணங்கள், மேற்குறிப்பிட்டுள்ள துறைகளிடமிருந்து அடையாள அட்டை, பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள், மண்டலம் 11 மற்றும் தனியார் தொண்டு நிறுவனம் மூலம் சில வீட்டு உபயோகப் பொருட்கள், மருத்துவக் காப்பீட்டு அடையாள அட்டைகள் மற்றும் தாட்கா அடையாள அட்டைகள் ஆகியவை மேயர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர்.எஸ்.அரவிந்த் ரமேஷ், துணை மேயர்மு.மகேஷ்குமார், ஆணையாளர்ஜெ. குமரகுருபரன், தெற்கு வட்டார துணை ஆணையாளர். எம்.பி.அமித், மண்டலக்குழுத் தலைவர் பெருங்குடி.எஸ்.வி.ரவிச்சந்திரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்**
**குன்னூர்**

திருமதி. சுனைனா,
க.பெ. சத்யபிரகாஷ்,
149/28/A, ஜகிர் ரெட்டிபட்டி,
ஜகிர் அம்மாபாளையம்,
சேலம் மாவட்டம்.
-----மனுதாரர்

எதிர்

வட்டாட்சியர் அவர்கள்,
குன்னூர் தாலுக்கா,
நீலகிரி மாவட்டம்.
-------- எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

நான் எனது தகப்பனார் மாதன், தாயார் ருக்மணி ஆகியோருக்கு கடந்த 27.08.1988 அன்று தாம்பட்டி கிராமம், நுந்தளா அஞ்சல், குன்னூர் தாலுக்கா என்ற முகவரியில் பிறந்துள்ளேன். அறியாமையின் காரணமாக பிறப்பு சான்றிதழ் வாங்கவில்லை. எனவே என்னுடைய பிறப்பு சான்றிதழ் கேட்டு குன்னூர்னுானுார் உதகமண் கோட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளேன். இது தொடர்பாக யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியான 10 நாட்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலமாக விண்ணப்பிக்கலாம் என இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு
திருமதி. சுனைனா,
மனுதாரர்.

**மாண்புமிகு சார்பு நீதிமன்றம்,**
**மேலூர்.**
**O.S.No: 103 / 2024**

R.V.அண்ணாத்துரை,
த/பெ.R.வெள்ளைத்தம்பி,
ஆண்டார்கொட்டாரம்,
மதுரை-625020
---- வாதி

--- எதிரிடை ---

D.15. கருப்பையா,
த/பெ.நாகலிங்க சேர்வை,
கிருஷ்ணசாமி பவர்லூம் பேக்டரி,
தண்ணீர் பந்தல், கருமத்தம்பட்டி அஞ்சல், கோயம்புத்தூர் மாவட்டம்.
D.16. குஞ்சரவள்ளி,
க/பெ.கருப்பையா, மேற்படி முகவரி.
--- 15,16-ம் பிரதிவாதிகள்

**அறிவிப்பு**

மேற்படி வாதி தாக்கல் செய்திருக்கும் அசல் வழக்கில் மேற்படி 15,16-ம் பிரதிவாதிகளாகிய தாங்கள் ஆஜராக 27.06.2025-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. இதில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணையிருந்தால் மேற்படி வாய்தா தேதியன்று காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

S.ஆசைத்தம்பி,
வழக்கறிஞர், மதுரை.

### இங்கி.க்கு எதிரான முதல் டெஸ்ட்:

# வலுவான நிலையில் இந்திய அணி

## முதல் இன்னிங்சில் 471 ரன்கள் குவிப்பு

லீட்ஸ், ஜூன் 22-

**பந்துவீச்சு தேர்வு...**

இந்தியா - இங்கிலாந்து இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி லீட்சில் நேற்று தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணியின் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதல் இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 85 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 359 ரன்கள் குவித்திருந்தது. கேப்டன் சுப்மன் கில் 127 ரன்களுடனும், ரிஷப் பண்ட் 65 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். ஜெய்ஸ்வால் 101 ரன்களில் ஆட்டமிழந்தார்.



**2-வது நாள் ஆட்டம்....**

இந்த சூழலில் 2-வது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. சுப்மன் கில், ரிஷப் பண்ட் தொடர்ந்து பேட்டிங் செய்தனர். சிறப்பாக ஆடிய இருவரும் இங்கிலாந்து பந்துவீச்சாளர்களுக்கு தண்ணி காட்டினர். இதில் கில் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்த பண்ட் சிறிது அதிரடி காட்டினார். 99 ரன்களில் இருந்த போது பண்ட் சிக்சர் அடித்து தனது சதத்தை பூர்த்தி செய்தார். டெஸ்ட் கிரிக்கெட்டில் அவரது 7-வது சதம் இதுவாகும். பண்ட் சதமடித்த சிறிது நேரத்திலேயே கில் 147 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கருண் நாயர் டக் அவுட்டில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். அவரைதொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த பண்ட் 134 ரன்களில் அவுட்டானார். அடுத்து வந்த ஷர்துல் தாகூர் ஒரு ரன்னில் நடையை கட்டினார்.

**சாய் - கருண் நாயர்...**

இந்திய அணியில் ஜெய்ஸ்வால், கில், பண்ட், கே.எல்.ராகுல், தவிர மற்ற வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தனர். இது இந்திய அணிக்கு பின்னடைவாக அமைந்தது. பின்வரிசை 6 பேட்ஸ்மேன்களில் ஜடேஜா (11 ரன்கள்) மட்டுமே இரட்டை இலக்கத்தை தொட்டார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சாய் சுதர்சன் மற்றும் கருண் நாயர் இருவரும் டக் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தனர். முடிவில் 113 ஓவர்கள் தாக்குப்பிடித்த இந்தியா முதல் இன்னிங்சில் 471 ரன்கள் குவித்த நிலையில் ஆல் அவுட் ஆனது. இங்கிலாந்து தரப்பில் பென் ஸ்டோக்ஸ் மற்றும் ஜோஷ் டங் தலா 4 விக்கெட்டுகள் வீழ்த்தினர். இதனையடுத்து இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்சை விளையாட உள்ளது.

**மோசமான சாதனை...**

முன்னதாக இந்த இன்னிங்சில் 3 வீரர்கள் சதமடித்தும் இந்திய அணியால் 471 ரன்களே எடுக்க முடிந்தது. இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 3 வீரர்கள் சதமடித்தும் ஒரு இன்னிங்சில் குறைந்த ரன்கள் அடித்த அணி என்ற மோசமான சாதனையை இந்திய அணி படைத்துள்ளது. அந்த பட்டியல் வருமாறு., 1. இந்தியா - 471 ரன்கள், 2. தென் ஆப்பிரிக்கா - 475 ரன்கள்., 3. ஆஸ்திரேலியா - 494 ரன்கள், 4. வெஸ்ட் இண்டீஸ் - 497 ரன்கள்.

### டெஸ்ட் கிரிக்கெட்டில்

# ஜெய்ஸ்வால் புதிய சாதனை

லண்டன், ஜூன் 22-

தனது முதல் டெஸ்ட் போட்டியிலேயே இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மண்ணில் சதம் விளாசிய முதல் வெளிநாட்டு வீரர் என்ற வரலாற்று சாதனையை ஜெய்ஸ்வால் படைத்துள்ளார்.



**ஜெய்ஸ்வால் சதம்...**

இங்கிலாந்து-இந்தியா இடையிலான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி லீட்சில் நடந்து வருகிறது. டாஸ் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் களமிறங்கிய இந்திய அணி முதல் நாள் முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 359 ரன்கள் குவித்துள்ளது. இங்கிலாந்துக்கு எதிரான தான் விளையாடிய முதல் போட்டியிலேயே ஜெய்ஸ்வால் சதம் அடித்து சாதனை படைத்தார்.

**161 ரன்கள் குவித்த....**

இதன்மூலம் தனது முதல் டெஸ்ட் போட்டியிலேயே இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மண்ணில் சதம் விளாசிய முதல் வெளிநாட்டு வீரர் என்ற வரலாற்று சாதனையை ஜெய்ஸ்வால் படைத்துள்ளார். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக பார்டர் - கவாஸ்கர் கோப்பையின் முதல் போட்டியிலேயே ஜெய்ஸ்வால் 161 ரன்கள் குவித்த நிலையில், இங்கிலாந்துக்கு எதிரான ஆண்டர்சன் - டெண்டுல்கர் கோப்பையின் முதல் போட்டியில் 101 ரன்கள் குவித்து இந்த சாதனையை ஜெய்ஸ்வால் படைத்துள்ளார்.

### டெஸ்ட் போட்டிகளில்

# 2 ஆயிரம் ரன்களை கடந்து சுப்மன் கில் புதிய சாதனை

லண்டன், ஜூன் 22-

டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணியின் கேப்டன் ஷுப்மன் கில் 2000 ரன்களைக் கடந்து சாதனை படைத்துள்ளார். மேலும் கேப்டனாக முதல் போட்டியில் சதம் அடித்தவர்கள் பட்டியலில் 5-வது இடத்தை பிடித்துள்ளார்.



**வலுவான நிலையில்...**

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் (ஜூன் 20) தொடங்கியது. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணி பந்துவீச்சைத் தேர்வு செய்ய, இந்திய அணி முதல் இன்னிங்ஸில் விளையாடி வருகிறது. முதல் இன்னிங்ஸில் விளையாடி வரும் இந்திய அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 359 ரன்கள் எடுத்து வலுவான நிலையில் இருந்தது.

**2000 ரன்களை...**

தொடக்க ஆட்டக்காரர்களான கே.எல்.ராகுல் 42 ரன்களும், யஷஸ்வி ஜெய்ஸ்வால் 101 ரன்களும் எடுத்தனர். முதல் நாள் ஆட்ட நேர முடிவில் கேப்டன் ஷுப்மன் கில் 127 ரன்களுடனும், துணைக் கேப்டன் ரிஷப் பந்த் 65 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். முதல் இன்னிங்ஸில் 127* ரன்கள் எடுத்ததன் மூலம், டெஸ்ட் போட்டிகளில் ஷுப்மன் கில் புதிய சாதனை ஒன்றை படைத்தார். டெஸ்ட் போட்டிகளில் 2000 ரன்களைக் கடந்து அவர் சாதனை படைத்துள்ளார். இதுவரை இந்திய அணிக்காக 33 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள ஷுப்மன் கில் 2000 ரன்களைக் கடந்துள்ளார். அதில் 6 சதங்கள் மற்றும் 7 அரைசதங்கள் அடங்கும்.

**5-வது வீரராக இடம்...**

டெஸ்ட்டில் கேப்டனாக முதல் போட்டியில் சதம் அடித்த ஷுப்மன் கில் ஜாம்பவான்கள் பட்டியலில் இணைந்துள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் இந்திய அணி முதல்நாளில் 359/3 ரன்கள் குவித்துள்ளது. இதில் ஜெய்ஸ்வால், ஷுப்மன் கில் சதமடித்து அசத்தினார்கள். இந்திய வீரர்களில் முதல்முறையாக கேப்டனாகி சதமடித்தவர்கள் வரிசையில் ஷுப்மன் கில் 5-வது வீரராக இடம் பிடித்துள்ளார்.

**கேப்படனாக சதம் அடித்தவர்கள்:**

1. விஜய் ஹசாரே -164* vs இங்கிலாந்து, 1951, தில்லி.
2. சுனில் கவாஸ்கர் - 116 vs நியூசிலாந்து, 1976, ஆக்லாந்து
3. திலிப் வெங்சர்கார் - 102 vs மே.இ.தீ., 1987, தில்லி.
4. விராட் கோலி - 115 vs ஆஸி., 2014, அடிலெய்ட்.
5. ஷுப்மன் கில் vs இங்கிலாந்து, ஹெடிங்லே, 2025.

# இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி வெல்லும்

## சச்சின் டெண்டுல்கர் கணிப்பு

மும்பை, ஜூன் 22-

சுப்மன் கில் தலைமையிலான இந்திய அணி 3-1 என்ற கணக்கில் வெற்றி பெறும் என்று கணித்துள்ளார்.

**சுற்றுப்பயணம்...**

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் நேற்று தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் முதலில் பந்து வீசுவதாக அறிவித்தார்.

**இந்தியா ஆதிக்கம்...**

இதையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி ஆதிக்கம் செலுத்தி வருகிறது. கேப்டன் சுப்மன் கில், ஜெய்ஸ்வால், ரிஷப் பண்ட் சதமடித்தனர்.

**இந்தியா வெல்லும்...**

இந்த சூழலில் இந்த தொடர் குறித்தும், இந்த தொடரில் வெற்றி பெறப்போகும் அணி குறித்தும் பல முன்னாள் வீரர்கள் தங்களது கணிப்பிடை வெளியிட்டு வருகின்றனர். அந்த வரிசையில் இந்திய முன்னாள் ஜாம்பவானான சச்சின் தெண்டுல்கர் தனது கணிப்பினை வெளியிட்டுள்ளார். அவரது கணிப்பின் படி, சுப்மன் கில் தலைமையிலான இந்திய அணி 3-1 என்ற கணக்கில் வெற்றி பெறும் என்று கணித்துள்ளார்.

## மழையால் போட்டி பாதிப்பு

இந்தியா - இங்கிலாந்து இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி லீட்சில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணியின் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதல் இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி முதல் இன்னிங்சில் 113 ஓவர்களில் 471 ரன்கள் குவித்த நிலையில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக கேப்டன் சுப்மன் கில் 147 ரன்களும், ரிஷப் பண்ட் 134 ரன்களும், ஜெய்ஸ்வால் 101 ரன்களும் அடித்தனர். இங்கிலாந்து தரப்பில் பென் ஸ்டோக்ஸ் மற்றும் ஜோஷ் டங் தலா 4 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

இதனையடுத்து இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்சை தொடங்க இருந்தது. அந்த சமயத்தில் லீட்சில் பெய்தது. இதனால் ஆட்டத்தை மீண்டும் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. இந்நிலையில் தற்போது மழை நின்றதை அடுத்து ஆட்டம் மீண்டும் தொடங்கியது. இங்கிலாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக பென் டக்கெட் - ஜாக் கிராலி களமிறங்கியுள்ளனர். பும்ரா முதல் ஓவரை வீசினார்.

## விடை பெற்றார் மேத்யூஸ்

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி ஆல் ரவுண்டரான ஏஞ்சலோ மேத்யூஸ் சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறும் முடிவை கடந்த மாதம் அறிவித்திருந்தார். அதன்படி தற்போது நடைபெற்று வரும் வங்காளதேசத்துக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி முடிந்ததும் ஓய்வு பெற உள்ளதாக அறிவித்திருந்தார்.அந்த சூழலில் இலங்கை - வங்காளதேசம் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி நேற்று முடிவடைந்தது.

இந்த போட்டியுடன் மேத்யூஸ் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து விடை பெற்றார். அவருக்கு ஆட்டமிழந்ததும் வங்காளதேச அணியினர் அவருக்கு கைகுலுக்கி பிரியா விடை கொடுத்தனர். எனினும் தனது கடைசி டெஸ்ட் போட்டியில் களமிறங்கிய மேத்யூஸ் இரு இன்னிங்ஸ்களிலும் முறையே 39, 8 ரன்கள் மட்டுமே அடித்தார்.

## தோனியின் சாதனை முறியடிப்பு

இங்கிலாந்து-இந்தியா இடையிலான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி லீட்சில் நடந்து வருகிறது. இப்போட்டியில் சிறப்பாக விளையாடிய ரிஷப் பண்ட் 65 ரன்கள் அடித்து அசத்தினார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் குறைந்த இன்னிங்ஸில் 3,000 (76 இன்னிங்ஸ்) ரன்களை கடந்த இந்திய விக்கெட் கீப்பர் என்ற சாதனையை ரிஷப் பண்ட் படைத்தார்.

இதற்கு முன் 144 இன்னிங்ஸில் 3000 ரன்களை கடந்திருந்த எம்.எஸ்.தோனியின் சாதனையை பண்ட் முறியடித்தார். டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 63 இன்னிங்ஸ்களில் 3000 ரன்களை கடந்து இப்பட்டியலில் ஆஸ்திரேலியாவின் ஆடம் கில்கிறிஸ்ட் முதலிடத்தில் உள்ளார். அவருக்கு அடுத்த இடத்தில பண்ட் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அபராதம் விதிக்க வாய்ப்பு

இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி லீட்சில் நடைபெற்று வருகிறது. இதில் சுப்மன் கில் கருப்பு சாக்ஸ் அணிந்து விளையாடியுள்ளார். ஐசிசி விதியின்படி ஒரு வீரர் வெள்ளை, க்ரீம் அல்லது வெளீர் சாம்பல் ஆகிய கலர் கொண்ட சாக்ஸ்தான் அணிய வேண்டும்.

ஒருநாள் போட்டிக்கும் இந்த விதி அடங்கும். ஐ.சி.சி.யின் ஆடை மற்றும் உபகரணங்கள் விதிகளின் பிரிவு 19.45 இன் படி, ஒரு வீரர் மேற்கூறிய வண்ணங்களின் சாக்ஸ் அணிய வேண்டும். இதனை சுப்மன் கில் மீறியுள்ளார்.

இதற்காக ஐசிசி அவருக்கு 10 முதல் 20 சதவீதம் வரை அபராதம் விதிக்க வாய்ப்புள்ளது. அத்துடன் டெஸ்ட் போட்டியில் விளையாடுதற்கு தடை விதிப்பதற்கான ஒரு புள்ளி பெறவும் வாய்ப்புள்ளது. எனினும், அவருடைய சாக்ஸ் அதிக ஈரப்பதம் ஆகி அல்லது வழக்கத்திற்க மாறாக தற்செயலாக அணிந்திருந்தால் அபராத்தில் இருந்து தப்பிக்கலாம்.

# திருச்செந்தூர் கோவில் கும்பாபிசேகம் குறித்து இன்று மீண்டும் நேரில் ஆய்வு

## அமைச்சர் சேகர்பாபு தகவல்

சென்னை, ஜூன் 22-

திருச்செந்துாரில் உள்ள திருப்புகழ் பகுதியில் 63 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.400 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நடைபெற்று வருவதாகவும், திருச்செந்தூர் கோவில் கும்பாபிசேகம் குறித்து இன்று மீண்டும் ஆய்வு செய்ய இருப்பதாகவும் அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னை கொளத்தூர், பெரியார் நகர், 70 அடி சாலையில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்படவுள்ள புதிய காவல் துணை ஆணையர் அலுவலகத்தின் பணிகளையும், வில்லிவாக்கம், சிவசக்தி நகரில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தின் முன்னேற்றப் பணிகளையும், தீவுத்திடலில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கண்காட்சி மையத்தின் முன்னேற்றப் பணிகளையும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும தலைவருமான சேகர்பாபு நேரில்சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார்.

பின்னர் அவர் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது., வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பணிகளை வாரத்திற்கு ஐந்து முறை ஆய்வு செய்து வருகிறேன் ஆய்வு அறிக்கைகள் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் மாதத்திற்கு இரண்டு முறையாவது குறித்து ஆலோசனை கூட்டங்களை நடத்தி வருகின்றார்.

கொளத்தூர் பகுதியில் ரூ.11 கோடி மதிப்பீட்டில் புதிய காவல் துணை ஆணையாளர் கட்டிடத்தின் பணிகளை பார்வையிட்டோம். அதனைத் தொடர்ந்து, அதிக அளவில் அந்நிய முதலீடுகளை ஈட்டும் வண்ண மீன் உற்பத்தியாளர்களுக்கு ஒரே இடத்தில் தொழில் வளர்ச்சிக்காக நிரந்தர கட்டமைப்பை உருவாக்கும் நோக்கில், ரூ.36 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

திருச்செந்தூர் கோவில் நடைபெறும் திருப்பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது. இன்று மீண்டும் ஆய்வுக்குச் செல்ல இருக்கிறோம். இந்து சமய அறநிலையத் துறையின்கீழ், திருப்புகழ் பகுதியில் 63 ஏக்கர் நிலத்தில் ரூ.400 கோடி மதிப்பில் நடைபெறும் இது வரலாற்றிலேயே மிகப்பெரிய திருப்பணியாகும். இது முதலமைச்சரால் நேரடியாக கண்காணிக்கப்படுகின்றது. நெடுஞ்சாலை மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர்கள் நேரடியாக செயல்பட்டுவேலைகளைத் தீவிரமாக நடத்தி வருகின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் அமைச்சர் கீதா ஜீவன் ஆகியோர் ஒருங்கிணைந்து இந்த பணிகளை சிறப்பாகமேற்கொண்டு வருகின்றனர். குடமுழுக்கு விழாவிற்குப் பிறகு பக்தர்கள் எண்ணிக்கை 70 சதவீதம் வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதால், அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளைஉருவாக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.



சென்னையில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலினை அவரது முகாம் அலுவலகத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சந்தித்து புகையிலை இல்லாத இளைஞர்கள் திட்டம்2.0-ஐசிறப்பாகசெயல்படுத்தியதற்காகதேசியபுகையிலைகட்டுப்பாட்டுதிட்டத்தின் கீழ் தமிழ்நாடு சிறப்பாக செயல்படும் மாநிலமாக அங்கீரிக்கப்பட்டு தேசிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் தேசிய மதிப்பாய்வு கூட்டத்தின்போது மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்து பெற்றார். இதில் முதன்மைச்செயலாளர் ப.செந்தில்குமார், பொது சுகாதாத்துறை இயக்குநர் டி.எஸ்.செல்வவிநாயகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டம் திறப்பு:

# மாற்றுத்திறனாளிகள் கோரிக்கைகள் படிப்படியாக நிறைவேற்றப்படும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி

சென்னை, ஜூன் 22-

ரூ.80 கோடியில் புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தை பொதுமக்களின் பார்வைக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். பின்னர் தனக்கு மாற்றுத்திறனாளிகள் சார்பில் நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், மிகப்பெரிய அளவில் மாற்றுத்திறனாளிகள் முன்னேறி வருகிறார்கள் என்றும் எல்லாரும் முன்னேறுவது சிலருக்கு பிடிக்கவில்லை என்றும் எல்லா சமூகத்தினரும் முன்னேற கூடாது என வகுப்புவாத சக்திகள் நினைக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

ரூ.80 கோடியில் புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தை பொதுமக்களின் பார்வைக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தில் முதல் நிகழ்ச்சியாக மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் உள்ளாட்சிப் பொறுப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பங்கேற்புரிமை வழங்கி, சமூக நீதியை நிலைநாட்டிய முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பாராட்டு விழா நடைபெற்றது.

இந்த பாராட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின கூறியதாவது:- இன்று (நேற்று) எனக்கு உணர்ச்சிப்பூர்வமான நாள். இந்த விழாவுக்காக மட்டுமல்ல, இந்த இடத்துக்காகவும் உணர்ச்சி வசப்படுகிறேன். வள்ளுவருக்கு முன்னாள் முதல்வர் கருணாநிதி சூட்டிய புகழ் மாலைகளில் மிக முக்கியமானது. 1974-ல் அவர் அடிக்கல் நாட்டிய இந்த வள்ளுவர் கோட்டம். திருவள்ளுவர் சிலையும், திருவாரூர் தேரும் அமைந்துள்ள இந்த கோட்டம் கலைஞரின் கனவு படைப்பு. இந்த கலை கருவூலத்தைத்தான் நாம் தற்போது 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பித்திருக்கிறோம்.

பாராட்டுக்காக நான் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கவில்லை. உங்கள் அன்புக்காகத்தான் பங்கேற்றிருக்கிறேன். நான் எப்போதும் உங்களில் ஒருவன்; மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகள் படிப்படியாக நிறைவேற்றப்படும். அரசியலுக்காக, தேர்தலுக்காக இதை செய்யவில்லை; உள்ளார்ந்து செய்கிறேன். உங்கள் கோரிக்கைகளுக்கு நீங்களே தீர்வு காண உள்ளாட்சி அமைப்பில் பொறுப்பு வழங்கப்பட்டது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 650 பேர், ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் 2,984 பேர் நியமிக்கப்படுவர். மாவட்ட வாரியாக ஜூலை 1 முதல் விண்ணப்பம் பெறப்பட்டு பரிசீலனை செய்யப்படும்.

மாற்றுத்திறனாளிகள் மிகப்பெரிய அளவில் முன்னேறி வருகிறார்கள். உயர்ந்த இடங்களை அடைந்திருக்கிறார்கள். சமூக தடைகளை உடைத்து முன்னேறி வருகின்றனர். முயற்சி செய்தால் எதுவும் முடியும் என்பதை உண்மையிலேயே நிரூபித்து வருபவர்கள் மாற்றுத்திறனாளிகள்தான். உங்களுக்கு நான் இருக்கிறேன்; இந்த அரசு இருக்கிறது என நம்பிக்கையோடு செயல்படுங்கள். உங்களுக்கான அனைத்து வாய்ப்புகளையும் வழங்குவது எனது கடமை. இது எல்லாருக்குமான ஆட்சி. ஆனால் எல்லாரும் முன்னேறுவது சிலருக்கு பிடிக்கவில்லை. எல்லா சமூகத்தினரும் முன்னேற கூடாது என வகுப்புவாத சக்திகள் நினைக்கின்றனர். இவ்வாறு கூறினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்துள்ள

# சிற்றுந்துகள் திட்டத்தால் 1 கோடி மக்கள் பயணம்: தமிழ்நாடு அரசு பெருமிதம்

சென்னை, ஜூன் 22-

மினி பேருந்து திட்டத்தால் இதுவரை பஸ் வசதி கிடைக்காத 90 ஆயிரம் கிராமப்புறங்களில் வசிக்கும் ஏறத்தாழ 1 கோடி மக்கள் பயணம் செய்து அளவில்லாத மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்துள்ள சிற்றுந்துகள் திட்டத்தால், 3,103 வழித்தடங்களில் உள்ள இதுவரை பஸ் வசதி கிடைக்காத 90 ஆயிரம் கிராமப்புறங்களில் வசிக்கும் ஏறத்தாழ 1 கோடி மக்கள் பயணம் செய்து அளவில்லாத மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள். இத்திட்டம் பொதுமக்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் தனியார் பேருந்துகளை அரசுடைமையாக்கி தமிழ்நாடு முழுவதிலும் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கினார்கள். இந்தியாவில் பேருந்து வசதிகளில் சிறந்த மாநிலம் தமிழ்நாடு எனும் பெருமை அதன் மூலம் ஏற்பட்டது.

தமிழ்நாட்டில் கடந்த 1997-ஆம் ஆண்டு பேருந்து வசதி பெறாத குக்கிராமங்களில் வாழும் மக்கள் பேருந்து வசதி பெறும் நோக்கில், சிற்றுந்து திட்டம் கருணாநிதியால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி, மாவட்டத்துக்கு 250 சிற்றுந்துகளுக்கு அனுமதி என்ற அடிப்படையில், பேருந்துகள் இயக்கப்படாத வழித்தடத்தில் 16 கி.மீ. மற்றும் பேருந்துகள் இயக்கப்படும் வழித்தடத்தில் 4 கி.மீ. என மொத்தம் 20 கி.மீ. என்ற அளவில் வழித்தடம் நீட்டிப்பு செய்து சிற்றுந்துகள் இயக்கப்பட்டு வந்தன.

சிற்றுந்துகள் திட்டம் தொடர்பான தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் வழக்கு ஒன்றில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் 2024 ஜூலை 22 ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டங்களில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்துத் தொழில் சார்ந்த பல்வேறு தரப்பினர் தெரிவித்த ஆலோசனைகள் அடிப்படையில் புதிய விரிவான சிற்றுந்துகள் திட்டம் 2024 குறித்து ஜனவரி 23-ம் தேதி அறிவிக்கப்பட்டது.

தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் மீண்டும் உயர்நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் நீதிமன்ற அறிவுறுத்தலின்படி வெளியிடப்பட்ட அறிக்கையில் மறுபடியும் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டு, மே 28-ம் தேதி புதிய அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, இத்திட்டத்தில், நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட குக்கிராமங்களை நகரப் பகுதிகளுடன் இணைக்கும் விதமாக, அதிகபட்ச வழித்தட தொலைவை 25 கி.மீ. ஆக உயர்த்தி வழித்தட நீட்டிப்பு செய்து, அதில் பேருந்து இயங்காத வழித்தடங்களில் குறைந்தபட்சம் 65 சதவிகிதம் என இயக்க வழிவகை செய்யப்பட்டு முக்கிய அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகள் போன்ற இடங்களுக்குச் சென்று மக்களை இறக்கிவிட ஏதுவாக மேலும் 1 கிலோ மீட்டர் தூரம் வரை சிற்றுந்துகளை இயக்கிடவும் வழிவகை செய்யப்பட்டது.

இதன்படி, தமிழ்நாட்டில் 2 ஆயிரத்து 94 புதிய வழித்தடங்கள் மற்றும் புதிய திட்டத்துக்கு மாறுதல் செய்யப்பட்ட 1,009 வழித்தடங்கள் என மொத்தம் 3 ஆயிரத்து 103 வழித்தடங்கள் அடையாளம் கண்டறியப்பட்டு 90 ஆயிரம் கிராமப்புறங்களில் வசிக்கும் ஏறத்தாழ 1 கோடி மக்கள் பயன்பெறத்தக்க வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின்படி சிற்றுந்துகள், பேருந்து நிறுத்தங்கள், பேருந்து நிலையங்களில் இருந்து புறப்படவும், நிறுத்தவும் வசதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தற்போது சிற்றுந்து இயக்கி வருபவர்கள் புதிய திட்டத்துக்கு மாற்றம் பெற்று இயக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் இத்திட்டத்தினை ஜூன் 16-ம் தேதி தஞ்சாவூரில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இதுவரை, பேருந்துகளை தங்கள் கிராமத்தில் காணாத மக்கள் எல்லாம் கண்டு மகிழ்ந்து பரவசம் அடையும் வகையில் சிற்றுந்துகள் கிராமப்புறங்களில் பயணிக்கத் தொடங்கி விட்டன. இந்த சிற்றுந்துகள் தங்களுடைய கிராமத்திற்கு வந்ததும் மூதாட்டி ஒருவர் தரையில் விழுந்து தலைவணங்கி பேருந்தை வரவேற்றார். வேறு சிலர் பேருந்து வந்த வழித்தடத்தில் கற்பூரம் ஏற்றி மகிழ்ந்து வரவேற்று மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்துள்ள இந்த சிற்றுந்து திட்டத்தால், தமிழக மக்களுக்கு பேருந்து இயக்கப்படாத 25 ஆயிரத்து 708 கி.மீ. தொலைவுக்கு புதிதாக பேருந்து வசதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன், ஏறத்தாழ 1 கோடி மக்கள் சிற்றுந்தில் பயணம் செய்து அளவில்லாத மகிழ்ச்சி அடைகிறார்கள். இத்திட்டம் பொதுமக்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# தங்கச்சிமடத்தில் 150 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய தூண்டில் வளைவு பாலத்திற்கு பூமி பூஜை



**ராமேசுவரம், ஜூன் 22-**

ராமேசுவரம் அருகே தமிழக முதல்வர் காணொளி காட்சி மூலம் அடிக்கல் நாட்டப்பட்ட ரூ.150 கோடி மதிப்பிலான மீன் பிடி தூண்டில் வளைவு பாலம் அமைக்க நேற்று பூமி பூஜை நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் அருகே தங்கச்சிமடம் சூசையப்பர் பட்டிணம் வடக்கு கடலோரப் பகுதியில் மீனவர்கள் பயன்பெறும் வகையில் பாதுகாப்பு மீன்பிடி விசைப்படகுகள் நிறுத்த ரூபாய் 150 கோடி மதிப்பில் தூண்டில் வளைவு பாலம் அமைக்க தமிழக முதல்வர் கடந்த மே மாதம் 28ஆம் தேதி அடிக்கல் காணொளி காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார் அதன் தொடர்ச்சியாக அந்த பணிகள் துவங்குவதற்காக நேற்று சூசையப்பர் பட்டிணம் வடக்கு கடலோரப் பகுதி அருகாமையில் பூமி பூஜை நடைபெற்றது.

இந்த பூஜைக்கு ராமநாதபுரம் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் தலைமை வகித்தார். ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் முன்னிலை வகித்தார். அதன் பின்னர் இருவரும் நிகழ்ச்சியில் குத்துவிளக்கேற்றி பூமி பூஜையை துவக்கி வைத்தனர் தொடர்ந்து நிகழ்ச்சியில் மீனவ சங்கத் தலைவர்கள் என் ஜே போஸ், சேசு ராஜா சகாயராஜ், கலந்து கொண்டு சிறைப்புரையாற்றானார்கள். நிகழ்ச்சியில் மாவட்ட மீன் துறை துணை இயக்குநர் கோபிநாத், மீன்துறை செயற் பொறியாளர் கணபதிரமேஷ் திட்டம் குறித்து விளக்கம் அளித்தனர்.

# திருமங்கலம் இலக்கியப் பேரவை கூட்டம்

**திருமங்கலம், ஜூன் 22-**

மதுரை மாவட்டம், திருமங்கலம் இலக்கியப் பேரவையின் 332வது கூட்டம் ஜவஹர்நகரிலுள்ள லிங்கா மெட்ரிகுலேசன் பள்ளி வளாகத்தில் நேற்று சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பேரவைத் தலைவர் பெ.பூலோகசுந்தரவிசயன் தலைமை வகித்தார். திருமங்கலம் அன்னை வசந்தா டிரஸ்ட் தலைவர் ப.அமுதவள்ளி பழனிமுருகன் முன்னிலை வகித்தார்.

இலக்கிய பேரவை செயலாளர் சு.சங்கரன் வரவேற்று பேசினார்;.

குறளும் பொருளும் என்ற தலைப்பில் இலக்கிய பேரவை புரவலர் அ.நமச்சிவாயம் உரையாற்றினார். அறிவோம் வரலாறு என்ற தலைப்பில் இலக்கியப் பேரவையின் பொருளாளர், சமூக ஆர்வலர் அ.தமிழ்ச்செல்வன் பேசினார்.

இதனை தொடர்ந்து 2024-25ம் கல்வியாண்டில் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் மூன்றாமிடம் பிடித்த மெப்கோ பள்ளி மாணவி வா.ரா.நிவேதித லட்சுமி, மெப்கோ பள்ளி அளவில் இரண்டாமிடம் பிடித்த மாணவன் கோ.ச.விக்னேஸ்வரன், 10ம் வகுப்பு பொதுத் தேர்வில் லிங்கா பள்ளி அளவில் முதலிடம் பிடித்த மாணவி அ.ஸ்ரீஹரிணி ஆகியோருக்கு இலக்கியப் பேரவையின் சார்பில் பரிசுகள் வழங்கிபாராட்டு தெரிவிக்கப் பட்டது. ஏராளமான இலக்கிய மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில் மதுரை செந்தமிழ் கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் க.சின்னப்பா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இலக்கிய வட்டத்தில் கண்ணதாசன் என்ற தலைப்பில் பேசினார். விழாவின் முடிவில் செயற்குழு உறுப்பினர் ம.பழனிராஜ் நன்றி கூறினார்.



**நத்தம் நீதிமன்ற வளாகத்தில் நீதிபதி ஆப்ரீன்பேகம் தலைமையில் உலக யோக தின விழா கொண்டாடப்பட்டது. இதில் வழக்கறிஞர்கள், நீதிமன்ற பணியாளர்கள் கலந்து கொண்டனர்.**

## வத்தலகுண்டு அருகே
# நவீன புதிய தார் சாலை: பேரூராட்சிக்கு பாராட்டு



**வத்தலக்குண்டு, ஜூன் 22-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு அருகில் உள்ள சேவுகம்பட்டி பேரூராட்சியைச் சேர்ந்த பட்டிவீரன்பட்டி குறுக்கு ரோடு முதல் கல்லுக்குழி வழியாக வத்தலகுண்டு பட்டிவீரன்பட்டி பிரதான சாலை வரை உள்ள சாலையானது மிகவும் மோசமானதாக இருந்தது குறித்து பொதுமக்கள் மற்றும் அப்பகுதி மக்கள் கேட்டுக்கொண்டிருக்கும் இணங்க. சேவுகம்பட்டி பேரூராட்சி நிர்வாக அனுமதி பேரில் நபார்டு திட்ட மூலம் 2024 2025 நிதியாண்டில் 103 லட்சம் மதிப்பில் புதிய நவீன தார் சாலை சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலையினை சிறப்பாகவும் நவீன முறையில் உறுதியுடன் அமைத்துக் கொடுத்துள்ள பேரூராட்சி தலைவர் வனிதா தங்கராஜன்.

துணைத் தலைவர் தெய்வ ராணி விஜயன் மற்றும் அனைத்து பேரூராட்சி கவுன்சிலர்களுக்கும். பேரூராட்சி செயல் அலுவலர் ரமேஷ்பாபு மற்றும் அதிகாரிகளுக்கும் பேரூராட்சி உதவி பொறியாளர் கருப்பையா மற்றும் அனைத்து அதிகாரிகளுக்கும் பொதுமக்களும் விவசாயிகளும் வாகன ஓட்டிகளும் பாராட்டி நன்றி தெரிவித்தார்.

# நெடுஞ்சாலை துறை பகுதியில் கொடிக்கம்பங்கள் அகற்றம்



**வத்தலகுண்டு, ஜூன் 22-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு நெடுஞ்சாலை துறை உதவி கோட்ட பொறியாளர் அலுவலகத்திற்கு உட்பட்டுள்ள வத்தலக்குண்டு உட்கோட்ட பகுதிகளுக்கு உட்பட்டுள்ள அனைத்து சாலைகளில்இருந்தகொடிக்கம்பங்களைஉயர்நீதிமன்றநீதிமன்றஉத்தரவுப்படிஅனைத்துகொடிக்கம்பங்கள்அப்புறப்படுத்தப்பட்டது.

மேலும் கொடிக்கம்பங்கள் நடவு செய்யப்பட்டிருந்த அனைத்து வகையான சிறு கட்டிடங்கள் ஜே.சி.பி. மூலம் இடித்து முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டது இப்பணியை போலீஸ் பாதுகாப்புடன் வத்தலகுண்டு நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் ராஜன் வத்தலகுண்டு உதவி பொறியாளர் தாமரை மாறன் மற்றும் நெடுஞ்சாலை துறை பணியாளர்கள் ஜேசிபி இயந்திரங்கள் மூலமாக அனைத்து கொடிக்கம்பங்களும் அப்புறப்படுத்தும் பணி முழுமையாக நடைபெற்றது.

## கட்டுமான தொழிலாளர்களுக்கு
# வீடுகள் அரசு கட்டித் தர வேண்டும்: பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம்



**பரமக்குடி, ஜூன் 22-**

தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, தமிழக கட்டிட தொழிலாளர்கள் மத்திய சங்கம், அமைப்பு சாரா தொழிலாளர்கள் மத்திய சங்கம், பொன் குமார் இளைஞரணி மற்றும் மகளிர் அணி சார்பில் ராமநாதபுரம் மாவட்ட சிறப்பு பொதுக்குழு கூட்டம் பரமக்குடியில் நடந்தது. இந்த கூட்டத்திற்கு கட்டுமான மத்திய சங்க மாவட்ட தலைவர் ராமச்சந்திரன் தலைமை தாங்கினார். அமைப்பு சாரா மத்திய சங்க மாவட்ட தலைவர் நாகசாமி முன்னிலை வகித்தார். கொளுவூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் உதயசூரியன் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளர்களாக எம்.எல்.ஏ.க்கள் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், முருகேசன், பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

கூட்டத்தில் ஒவ்வொரு தொகுதிக்கும் கட்டுமான தொழிலாளர்களுக்கு குடியிருப்பு வீடுகள் அரசு சார்பில் கட்டித் தர வேண்டும். கட்டுமான தொழிலாளர்களுக்கு 60 வயது முடிந்தால் 1200 ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

அதை ரூ.2 ஆயிரம் ஆக உயர்த்தி வழங்க வேண்டும். வீடு கட்டும் திட்டத்தில் உள்ள நடைமுறைகளை தளர்த்தி எளிமைப்படுத்த வேண்டும் உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மாநில பொதுச் செயலாளர்கள் சுந்தர்ராஜ், ஜெகதீசன், குரு நாகலிங்கம் உள்பட மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



**யோகா தினத்தை முன்னிட்டு பாம்பன் ரயில் பாலத்தில் ரயில்வே அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் சார்பாக யோகா பயிற்சி நடைபெற்றது.**

# திருமங்கலத்தில் பி.கே.என் கல்லூரியில் சர்வதேச யோகா தினவிழா கடைபிடிப்பு



**திருமங்கலம், ஜூன் 22-**

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு திருமங்கலம் பி.கே.என் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பாக மாணவ, மாணவியர்களுக்கு சிறப்பு யோகா செய்முறை பயிற்சியளிக்கப்பட்டது. இந்தியா மட்டுமின்ற பல்வேறு உலக நாடுகளிலும் சர்வதேச யோகா தினம் நேற்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதன் ஒருபகுதியாக மதுரை மாவட்டம் திருமங்கலம் பி.கே.என் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு நேற்று காலை சிறப்பு யோகா செய்முறை பயிற்சியளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு கல்லூரியின் முதல்வர் டாக்டர் ஆர்.கணேசன் தலைமை வகித்தார்.

கல்லூரியின் தலைவர் ஆர்.தினேஷ்நாடார், செயலாளர் என்.மோகன்நாடார், பொருளாளர் ஆர்.மணிசங்கர் நாடார் ஆகியோர் முன்னிலை வகித்து சிறப்பித்தனர். கல்லூரி ஐ.டி பிரிவு துறைத்தலைவர் பி.நாகலட்சுமி வரவேற்று பேசினார். இந்நிகழ்ச்சியில் திருமங்கலம் வட்டார சுகாதார ஆய்வாளர் டி.பழனி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு யோகா செய்முறை பயிற்சியளித்து சிறப்புரையாற்றினார்.

இந்த பயிற்சியில் கல்லூரியின் தேசிய நாட்டு நலப்பித்திட்டம் மற்றும் தேசிய மாணவர் படையினை சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகள் ஆர்வமுடன் பங்கேற்று பயனடைந்தனர். இவ்விழாவின் நிறைவில் கல்லூரியின் பி.காம் வங்கியியல் துறைத் தலைவர் கே.சங்கிலிகருப்பையா நன்றி தெரிவித்தார்.

# சிவகங்கை மாவட்டத்தில் வளர்ச்சிப்பணிகள்: மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித் நேரில் ஆய்வு

**சிவகங்கை, ஜூன் 22-**

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி தேர்



வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து, மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித்ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் பேசியதாவது:-

தமிழ்நாடு முதல்வர் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து, அதனை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், மக்கள் நலத்திட்டங்கள் மட்டுமன்றி பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் மேம்படுத்திடும் பொருட்டு, அனைத்து பகுதிகளிலும் வளர்ச்சி பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில், சிவகங்கை மாவட்டம் முழுவதும் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதில், இளையான்குடி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த நான்காண்டுகளில் மொத்தம் 96 வளர்ச்சி திட்டப்பணிகள் ரூ.5,216.58 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதில், 2021-2022 ஆம் நிதியாண்டில் மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ் ரூ.100 லட்சம் மதிப்பீட்டிலும், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பணிகள், ரூ.375.83 லட்சம் மதிப்பீட்டிலும், 15 வது நிதிக்குழு மானிய நிதி திட்டத்தின் கீழ் 8 பணிகள், ரூ.27.30 லட்சம் மதிப்பீட்டிலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 கீழ் 1 பணி ரூ.44.27 லட்சம் மதிப்பீட்டிலும், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் 2 பணிகள் ரூ.4 லட்சம் மதிப்பீட்டிலும், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 1 பணி ரூ.21 லட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் 15 வளர்ச்சி திட்டப்பணிகள் ரூ.572.40 லட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2022-23 ஆம் நிதியாண்டில் அம்ருத் 2.0 திட்டத்தின் (குடிநீர் மேம்பாட்டு திட்டம்) கீழ் 1 பணி ரூ.2,804 லட்சம் மதிப்பீட்டிலும், அம்ருத் 2.0 திட்டத்தின் (ஊரணி மேம்பாட்டு திட்டம்) கீழ் 1 பணி ரூ.106 லட்சம் மதிப்பீட்டிலும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 5 பணிகள் ரூ.77.16 லட்சம் மதிப்பீட்டிலும், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் 1 பணி ரூ.8 லட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் 8 வளர்ச்சி திட்டப்பணிகள் ரூ.2,995.16 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோன்று, 2023-24-ம் நிதியாண்டில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2 பணிகள் ரூ.87 லட்சம் மதிப்பீட்டிலும், மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ் 5 பணிகள் ரூ.311 இலட்சம் மதிப்பீட்டிலும், அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் 1 பணி, ரூ.21 லட்சம் மதிப்பீட்டிலும், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் 8 பணிகள் ரூ.78.50 லட்சம் மதிப்பீட்டிலும், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் 3 பணிகள் ரூ.18 இலட்சம் மதிப்பீட்டிலும், அயோத்தி தாசர் பண்டிதர் திட்டத்தின் கீழ் 1 பணி ரூ.20 இலட்சம் மதிப்பீட்டிலும், 15 வது நிதிக்குழு மானிய நிதி திட்டத்தின் கீழ் 24 பணிகள் ரூ.195.81 லட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் 44 பணிகள் ரூ.731.31 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2024-25 ஆம் நிதியாண்டில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2023-24 மற்றும் 2024-25ன் கீழ் 1 பணி ரூ.581 லட்சம் மதிப்பீட்டிலும், தூய்மை இந்தியா திட்டம் 2024-25ன் கீழ் 1 பணி ரூ.43.25 லட்சம் மதிப்பீட்டிலும், அயோத்தி தாசர் பண்டிதர் திட்டத்தின் கீழ் 1 பணி ரூ.20 லட்சம் மதிப்பீட்டிலும், 15 வது நிதிக்குழு மானிய நிதி திட்டத்தின் கீழ் 18 பணிகள் ரூ.116.33 லட்சம் மதிப்பீட்டிலும், இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் திட்டத்தின் கீழ் 1 பணி ரூ.78 லட்சம் என மொத்தம் 22 வளர்ச்சி திட்டப்பணிகள் ரூ.838.58 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2025-26-ம் நிதியாண்டில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 1 பணி ரூ.44 லட்சம் மதிப்பீட்டிலும், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் 5 பணிகள் ரூ.29.13 இலட்சம் மதிப்பீட்டிலும், பள்ளி மேம்பாட்டு மானிய திட்டத்தின் கீழ் 1 பணி ரூ.6 இலட்சம் மதிப்பீட்டிலும் என 7 பணிகள் ரூ.79.13 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில், இளையான்குடி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2024-2025ன் கீழ் ரூ.33.00 லட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 4, பூச்சியேந்தல் ஊரணியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மராமத்து பணி குறித்தும், பழைய பேருந்து நிலையம் அருகில் மூலதன மானிய நிதி திட்டம் 2023-2024ன் கீழ் ரூ.115.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு வளாகத்துடன் கூடிய நூலக கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் குறித்தும், அம்ருத் 2022-2023 திட்டத்தின் கீழ் ரூ.2,804 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள குடிநீர் மேம்பாட்டு திட்ட பணிகளான மேல்நிலை நீர் தேக்க தொட்டி அமைக்கும் பணி மற்றும் பேரூராட்சி வளமீட்பு பூங்காவில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2023-2024 மற்றும் 2024-2025ன் கீழ் ரூ.581 இலட்சம் மதிப்பீட்டில் கசடு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி மற்றும் புதிய பேருந்து நிலையமும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், இளையான்குடி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து தரமான முறையில் முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. என மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, மண்டல உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) ஜெயகிருஷ்ணன், இளையான்குடி பேரூராட்சி செயல் அலுவலர் அன்னலட்சுமி, திருப்புவனம் தொகுப்பு இளநிலை பொறியாளர் சந்திரமோகன் மற்றும் பேரூராட்சி துப்புரவு ஆய்வாளர் தங்கத்துறை உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



**சிவகங்கை மாவட்டத்தின் பல்வேறு வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் திருமங்கலம் நகரிலுள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தினை நேரில் பார்வையிட்டு அதன் செயல்பாடுகளை கேட்டறிந்ததுடன் வரும் காலங்களில் தங்களது விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் மூலம் சந்தைப்படுத்த இருப்பதாக உறுதியளித்தனர்.**



சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்ற தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமியை நேற்று சேலம் நெடுஞ்சாலை நகரில் உள்ள அவரது இல்லத்தில் அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற இணைச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள எம்.கே.செல்வராஜ் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### மதுரை வேலம்மாள் சர்வதேச பள்ளியில் யோகா தினவிழா:

# யோகா பயிற்சி மூலம் மனிதனின் உடல்நலம் மட்டுமல்ல, மனநலனும் பாதுகாக்கப்படும்

## கவர்னர் ஆர்.என்.ரவி மாணவர்களுக்கு அறிவுரை

மதுரை, ஜூன் 22-

மதுரை வேலம்மாள் சர்வதேச பள்ளியில் யோகா தின விழா வை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் யோகா பயிற்சியின் மூலம் மனித மன உடல் நலம் மட்டுமல்ல மனநலனும் பாதுகாக்கப்படும் என்று தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி மாணவர்களிடையே பேசினார்.

மதுரை வேலம்மாள் சர்வதேச பள்ளி மைதானத்தில் 11-வது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு வேலம்மாள் கல்வி குழும நிறுவனத்தின் சார்பில் 10 ஆயிரம் பேர் கலந்து கொண்ட மெகா யோகா சாதனை நிகழ்வு நடைபெற்றது. இதில் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி கலந்து கொண்டார். வேலம்மாள் கல்வி குழுமம் சார்பாக மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் இருந்து 10 ஆயித்து 200 பேர் கலந்து கொண்ட மதுரையின் முதல் சாதனைகாலை 8 மணிக்கு நடைபெற்றது. சர்வதேச யோகா 11வது ஆண்டு விழா நிகழ்ச்சியினை தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி துவக்கி



தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி கலந்து கொண்ட 11-வது சர்வதேச யோக தினத்தை முன்னிட்டு வேலம்மாள் கல்வி குழுமம நிறுவனத்தின் சார்பில் 10 ஆயிரம் பேர் கலந்து கொள்ளும் மெகா யோகா சாதனை நிகழ்வு நடைபெற்றது.தனியார் விடுதியில் தங்கி இருந்த ஆர்.என்.ரவி காலை 7.50 மணிக்கு வேலம்மாள் சர்வதேச பள்ளி வளாகத்திற்கு வந்தார், வேலம்மாள் கல்வி குழும தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம் மற்



றும் கல்லூரி மாணவர்களின் பாண்டு இசை முழுங்க வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் காலை 8 மணிக்கு சர்வதேச யோகா 11வது ஆண்டு விழா நிகழ்ச்சியினை தமிழக ஆளுநர் ரவி துவக்கி வைத்து யோகா பயிற்சியினை உசேன் போல்ட் மைதானத்தில் மேற்கொண்டார். வேலம்மாள் சர்வதேச பள்ளி உசேன் போல்ட் மைதானத்தில் காலை 8.05 மணிக்கு கவர்னர், ஆர்.என். ரவி யோக பயிற்சியை துவக்கி பல்வேறு யோகாசனங்களின் பெயர் கூறி மாணவர்களுக்கு செய்து காட்டினர். வேலம்மாள் சர்வதேச பள்ளி உசேன் போல்ட் மைதானத்தில் காலை 8.05 மணிக்கு கவர்னர், ஆர்.என்.ரவி யோக பயிற்சியை துவக்கி பல்வேறு யோகாசனங்களின் பெயர் கூறி மாணவர்களுக்கு செய்து காட்டினர். யோகசனங்களை செய்வதால் உடலுக்கும் உங்கள் மனதிற்கும் புத்துணர்வு கிடைக்கும் நன்றிசிறப்பாக செய்கிறீர்கள் என்று மாணவர்களிடையே விளக்கி பேசினார்.அதில் தண்டால் பயிற்சி மூலம் 51 தண்டால் செய்தார் கவர்னர் ஆர்.என்.ரவி.

உடலுக்கு வலிமை சேர்ப்பது தான் மனதுக்கும் வலிமை சேர்க்கிறது நான் சில ஆண்டுகளுக்கு முன்பு முதுகு வழியால் பாதிக்கப்பட்டு மிகவும் சிரமப்பட்டேன். அப்போது ஒரு சில யோகாசனங்கள் செய்வ தன் மூலம் எனது முதுகுவலியை யோகா பயிற்சியின் மூலம் சரிப்படுத்தி உடற்பயிற்சியின் அவசியத்தை புரிந்து கொண்டேன். யோக பயிற்ச்சி மிகவும் சிறந்தது.பயிற்ச்சியாக எண்ணாமல் தொடர்ந்து செய்தோமானால் நமது உடல், மனம் வளம் பெறும் ஆசையால் நாம் யோகாவை பின்பற்றுவோம். வேலம்மாள் குழுமம் சார்பில் நடைபெற்ற இந்த பெருமை மிகு யோகா நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்த மேதகு ஆளுநருக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கின்றேன் என்று வேலம்மாள் கல்வி குழு தலைவர் எம்.வி. முத்துராமலிங்கம் கூறினார்.

வைத்து யோகா பயிற்சி மேற்கொண்டார்.

மதுரை வேலம்மாள் சர்வதேச பள்ளி உசேன் போல்ட் மைதானத்தில் சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு யோகா பயிற்சி குறித்து விளக்கம் அளித்தார் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி.

மதுரை வேலம்மாள் சர்வதேச பள்ளி மைதானத்தில்

இதில் நன்றியுரையாக வேலம்மாள் கல்வி குழும தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம் கூறுகையில்,யோகாசன பயிற்சிகள் மூலம் நமது



மதுரை மாநகராட்சி நாராயணபுரம் வாசுகி நகர் முதல் தெருவில் புதிதாக அமைக்கப்பட்ட பாதாள சாக்கடை பணிகள் குறித்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் மேயர் இந்திராணி, மாவட்ட கலெக்டர் சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், மண்டலத்தலைவர் வாசுகி சசிக்குமார் அவர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# மதுரை முருக பக்தர்கள் மாநாட்டுக்கு வாழ்த்துக்கள்

## எடப்பாடி பழனிசாமி பேட்டி

சென்னை, ஜூன் 22-

ஒவ்வொரு அமைப்பும், அவரவர் விரும்பும் தெய்வங்களை வழிபடுவது ஜனநாயகத்தின் உரிமை. அந்த அடிப்படையில், தான் மதுரையில் முருக பக்தர்கள் மாநாடு நடத்துகிறார்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துக்கள் என அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., பதில் அளித்தார்.

கோவை விமான நிலையத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

ஒவ்வொரு அமைப்பும், அவரவர் விரும்பும் தெய்வங்களை வழிபடுவது ஜனநாயகத்தின் உரிமை. அந்த அடிப்படையில், தான் மதுரையில் முருக பக்தர்கள் மாநாடு நடத்துகிறார்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

தாய்மொழி என்பது அனைவருக்கும் முக்கியம் தாய்மொழிக்கு கொடுக்கக் கூடிய முக்கியத்துவத்தை விட ஆங்கிலத்திற்கு அதிகமாக கொடுக்கின்றார்கள் என்று தான் அமித்ஷா கூறி இருக்கிறார். யோகாசனம் என்பது உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் முக்கியமான ஒன்று. அதை பாரத பிரதமர் முன்னின்று நடத்துகிறார் அதற்கு என்னுடைய வாழ்த்துக்கள். இவ்வாறு அவர் கூறினார்.

நிருபர்: தமிழக அமைச்சர்கள் மற்றும் தி.மு.க., நிர்வாகிகள் பொதுவெளியில் ஆபாசமாக பேசுவதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

இதற்கு, "நாங்கள் ஏற்கனவே இது குறித்து கண்டன அறிக்கை வெளியிட்டு இருக்கிறோம். தி.மு.க., ஆட்சியை பொருத்தவரைக்கும், இன்று மக்கள் இடையே மிகப்பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டு இருக்கிறது. மக்கள் விரோத ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

அதையெல்லாம் மடைமாற்றம் செய்வதற்காக, இப்படி கேலிச்சித்திரம் அவதூறு கருத்துக்களை வெளியிடுவது வாடிக்கையாகிக் கொண்டே இருக்கிறது. 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் நிச்சயம் இதற்கான பதில் கிடைக்கும். மக்கள் இதற்கான தக்க தண்டனை வழங்குவார்கள்" என இ.பி.எஸ்., பதில் அளித்தார்.

# அமைதிக்கான வழியை...(1-ம் பக்க தொடர்ச்சி)

பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பிரதமர் மோடி இந்த நிகழ்வில் யோகாசனம் செய்தார்.

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் மக்கள் பலரும் ஒன்றாக இணைந்து யோகா செய்தனர். இதில் பல்வேறு மாநில ஆளுநர்கள், முதல்வர்கள், அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்றனர். தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி மதுரையில் உள்ள பள்ளி ஒன்றில் யோகா பயிற்சி செய்தார். புதுச்சேரியில் கடற்கரை சாலையில் புதுச்சேரி ஆளுநர் கைலாஷ்நாதன் மற்றும் முதல்வர் ரங்கசாமி ஆகியோர் யோகா பயிற்சி நிகழ்வில் பங்கேற்றனர். இதே போல உலக நாடுகளிலும் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது. ஜப்பான், ஜிம்பாப்வே உள்ளிட்ட உலக நாடுகளில் மக்கள் பலர் கூடி யோகா செய்தனர்.



சென்னை செம்மஞ்சேரி செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியில் பள்ளி கல்வித்துறை சார்பில் நேற்று நடைபெற்ற "கலைச்சிற்பி" மாநில அளவிலான பயிலரங்க நிகழ்ச்சியில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பயிலரங்கில் பங்கேற்ற மாணவ, மாணவிகளுக்கு நினைவு பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்வில் முதன்மைச்செயலாளர் ப.சந்திரமோகன், மாநில திட்ட இயக்குநர் மா.ஆர்த்தி, சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ், பள்ளிக்கல்வி இயக்குநர் ச.கண்ணப்பன், தொடக்கக்கல்வி இயக்குநர் பூ.ஆ.நரேஷ், செம்மஞ்சேரி, செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரி முதல்வர் வே.வள்ளிநாயகம் மற்றும் ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர், ஜூன் 22-

கர்நாடக மாநிலத்தில் காவிரியில் நீர் பிடிப்புப் பகுதிகளிலும், கேரள மாநிலம் வயநாட்டிலும் மழை பெய்து வருகிறது.

தொடர் மழை காரணமாக கபினி மற்றும் கிருஷ்ணராஜ சாகர் அணைகளுக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. கபினி அணை நிரம்பும் தருவாயில் உள்ளதால் அணையின் பாதுகாப்பு கருதி காவிரியில் வினாடிக்கு 25 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

வெள்ளிக்கிழமை காலை முதல் கபினியில் திறக்கப்பட்ட தண்ணீர் மேட்டூர் அணைக்கு வர தொடங்கியது.

வெள்ளிக்கிழமை காலை மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 8,218 கன அடி வீதம் வந்து கொண்டிருந்த நீர்வரத்து மாலையில் வினாடிக்கு 16,341 கன அடியாகவும் சனிக்கிழமை காலை வினாடிக்கு 18,220 கன அடியாகவும் அதிகரித்து உள்ளது. நீர் வரத்து அதிகரித்து உள்ளதால் நேற்று முன்தினம் காலை 113.57 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை காலை 113.69 அடியாக உயர்ந்துள்ளது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு 16,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது. அணையின் நீர் இருப்பு 83.76 டிஎம்சியாக உள்ளது.

# தமிழ்நாட்டில் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் வந்தே தீரும்

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் உறுதி

சென்னை, ஜூன் 22-

சென்னை அரும்பாக்கத்தில் உள்ள அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி மருத்துவத்துறை சார்பில் சர்வதேச யோகா தினம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

முதன்மைச் செயலாளர் செந்தில்குமார், இந்திய மருத்துவத்துறை மற்றும் ஹோமியோபதி ஆணையர் விஜயலட்சுமி, அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவ கல்லூரியில் பயிலும் மாணவிகள், மருத்துவமனையில் உள் நோயாளிகள் மற்றும் வெளி நோயாளிகளாக சிகிச்சை பெறுபவர்கள் என 500-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு யோகா செய்தனர்.

பின்னர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- சித்த மருத்துவ பல்கலைக்கழகம் அமைப்பதற்கு கவர்னர் ஒப்புதல் தராமல் இருந்தார். பிறகு சட்டமன்றத்தில் அந்த மசோதா திரும்ப பெற்றுக் கொள்ளப்பட்டது. தற்போது சட்டபூர்வமான ஆய்வுகள் நிறைவடைந்து வருகிற சட்டமன்ற கூட்டத்தொடரில் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் தொடர்பான மசோதா கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மாதவரம் பகுதியில் 25 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு பல்கலைக் கழகம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்து தயாராக உள்ளது. சித்த பல்கலைக்கழக மசோதா சட்டமன்றத்தில் மீண்டும் நிறைவேற்றிய பிறகு சம்பந்தப்பட்டவர்களின் ஒப்புதல் பெற்று நிச்சயம் தமிழ்நாட்டில் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் வந்தே தீரும். போதைப்பொருள் குறித்து எடப்பாடி பழனிசாமி கூறும் கருத்துக்கள் வேடிக்கையாக உள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் கஞ்சா சாகுபடி 0 சதவீதமாக உள்ளது. எங்கேயாவது கஞ்சா சாகுபடி செய்யப்படுகிறது என்று எடப்பாடி பழனிசாமி சொன்னால் நடவடிக்கை எடுக்க அரசு தயாராக உள்ளது. கடந்த ஆண்டுகளில் பெருகி இருந்த போதை நடமாட்டம் தற்பொழுது மிகப்பெரிய அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தி இன்றைக்கு கஞ்சா பூஜ்யம் சதவிகித சாகுபடி என்ற நிலையை இந்த அரசு உருவாக்கி இருக்கிறது என்பதை எடப்பாடி பழனிசாமி நன்கு உணர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.